Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 10, 2024

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 10, 2024 | ஒளி: 10 கதிர்: 111 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தேங்காய் சம்பலும், குழம்பும் நிறுத்தம்

சந்தையில் தேங்காய்களின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான இடங்களில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில் தேங்காய் சம்பல் மற்றும் தேங்காய்ப் பாலில் செய்யப்பட்ட குழம்பு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை நடத்துவோர் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

ஒரு தேங்காயின் விலை சந்தையில் 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அரிசி, முட்டை, உப்பு, தேங்காய் ஆகியவற்றின் விலை உயர்வினால் உணவுப் பொருட்களின் விலை 30 வீதத்தால் சிற்றுண்டிச்சாலைகளில் அதிகரிக்கப்படும் எனவும் ருக்ஷான் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாவில் இருந்து 1,280 ரூபாவாக அதிகரித்துள்ளது என அவர் கூறியுள்ளார். அதன்படி, அப்பம் மற்றும் மதிய உணவுப் பொதிகள் தயாரித்தல் ஆகியவையும் தேங்காய் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ளன.



# இரவு 10 மணி வரை ஒரு நாள் சேவை

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கையினை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டை விநியோகிக்கும் நேர எல்லையை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் கீழ் வார நாட்களில் இரவு 10 மணி வரை ஒரு நாள் சேவையில் கடவுச்சீட்டினை பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கையில் கடவுச்சீட்டு பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# திறந்த நீதிமன்றில் பகிரங்க மன்னிப்பு கேட்டார் லொஹான்

மதுபோதையில் ஜீப் வண்டியை ஓட்டிச் சென்று, காரொன்றுடன் மோதி, அந்த காரில் பயணித்துக்கொண்டிருந்த சட்டத்தரணியை கடுமையாக திட்டி, மரண அச்சுறுத்தல் விடுத்தார் என்ற சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தான் அச்சுறுத்திய சட்டத்தரணியிடம், திறந்த நீதிமன்றத்தில், திங்கட்கிழமை (09) பகிரங்க மன்னிப்பு கோரினார்.

தொடர்ச்சி P2



# "பதுக்கிய நெல்லை எடுத்தால் அரிசி தட்டுப்பாட்டை நீக்கலாம்"



விவசாயிகளின் உற்பத்தி செலவினை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும். பதுக்கிவைக்கப்பட்டுள்ள நெல்லை வெளியில் கொண்டுவருவதன் மூலம் அரிசி தட்டுப்பாட்டை நீக்க முடியும் என தேசிய கமக்காரர் அதிகார சபையின் தலைவர் திலக் பண்டார தெரிவித்தார்.

தேசிய கமக்கார அதிகார சபையின் ஊடக சந்திப்பு மட்டக்களப்பில் உள்ள கம நல அபிவிருத்தி திணைக்களத்தின் மண்டபத்தில் திங்கட்கிழமை(09) நடைபெற்றது. இதன்போது தேசிய கமக்கார அதிகார சபையின் தலைவர், பொருளாளர், உப செயலாளர் உள்ளிட்ட தேசிய அதிகார சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் மட்டக்களப்பு மாவட்ட தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். தேசிய கமக்கார அதிகார சபையின் தலைவர் திலக் பண்டார கருத்து தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## மாவடிப்பள்ளி அனர்த்தத்தில் உயிர் நீர்த்த உறவுகளுக்காக
# அகல் விளக்குகளில் தீபச்சுடரேந்தி பிரார்த்தனை



■ பாறுக் ஷிஹான்



மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் உயிர் நீத்த உறவுகளுக்கான சர்வமத ஆத்ம சாந்தி பிரார்த்தனை, காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய முச்சந்தியில் தலைவர் சிவஸ்ரீ க.வி. பிரவீன் தலைமையில் கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை(08) மாலை நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# எம்.பி. வாகனத்தில் மோதி பெண் மரணம்

புத்தளம், பொலவத்தை சந்தியில் உள்ள பாதசாரி கடவையில் நடந்து சென்ற 65 - 70 வயதுக்கு இடைப்பட்ட யாசக பெண் மீது பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# பிடியாணையில் இருந்தவரை பிடித்ததனால் பதற்றம்

■ க.அகரன்

வவுனியாவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்த நிலையில் அந்த பகுதியில் பதற்றமான நிலைமை, திங்கட்கிழமை (09) மாலை ஏற்பட்டிருந்தது.

வவுனியா நீதிமன்றிற்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர்

தொடர்ச்சி P2



# புதிய வருமான வழி இரத்தா, இல்லையா?

## பார் பேமிட் குறித்து கேள்வி எழுப்பி ரணில் விளக்கம்



கலால் திணைக்களத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாகவே அனைத்து கலால் உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட உரிமங்கள் ஊடாக, குறித்த ஒன்பது மாதங்களில் அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் 3.1 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## யாழ்ப்பாணம்–கொழும்பு கடுகதி
# ஒவ்வொரு நாளும் ஓடும்

■ எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையான குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை, எதிர்வரும் 30ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் இச்சேவை நடத்தப்பட்டது. பாடசாலை விடுமுறை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கைக்கு அமைவாக இம்மாதம் 30ஆம் திகதி வரை இச் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

# "விளையாட்டிலிருந்து அரசியலை நீக்குவேன்"

விளையாட்டிலிருந்து அரசியலை முற்றாக நீக்கி, சகல விளையாட்டுகளையும் ஒலிம்பிக் போட்டிகளின் இலக்கை நோக்கிக் கொண்டு செல்லும் திட்டங்கள் 2025 ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் எனவும், இதனால் 2028 ஆம் ஆண்டை ஒரு ஒலிம்பிக் வருடமாக எதிர்பார்க்கலாம் எனவும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன, திங்கட்கிழமை (09) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இலங்கையின் முன்னேற்றமானது பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில்
# அமெரிக்கா ஆதரவளிக்கும்

ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லு (Donald Lu) தலைமையிலான உயர்மட்ட அமெரிக்கத் தூதுக் குழுவினர் சபாநாயகர் (கலாநிதி) அசோக ரன்வலவை பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (06) சந்தித்தனர்.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பின் (USAID) ஆசியப் பணியகத்தின் துணை உதவி நிர்வாகி அஞ்சலி கௌர் (Anjali Kaur), அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களத்தின் ஆசியாவுக்கான துணை உதவிச் செயலாளர் ரெபேர்ட் கப்ரொத் (Robert Kaproth) உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் இந்தத் தூதுக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர்.

பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சி தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கிடைத்த ஆணையை இலங்கையில் தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டுசெல்வது தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது.



ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பு இலங்கைக்குத் தொடர்ந்தும் வழங்கிவரும் ஒத்துழைப்பு குறித்து நன்றி தெரிவித்த சபாநாயகர், பல்வேறு திட்டங்களின் ஊடாக மக்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான உறவைப் பலப்படுத்த முடிந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அரிசி கட்டுப்பாட்டை நீக்கலாம்”

விவசாயிகளாகிய எங்களை அறியாமல் அரசினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் நாங்கள் கவலை தெரிவிக்கின்றோம். மட்டக்களப்பில் 2 இலட்சம் ஏக்கர் நிலங்களில் பயிர்களை விதைத்திருந்தாலும், அதில் 1 1/2 இலட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இன்னமும் மட்டக்களப்பில் வெள்ள நீர் வயல்களிலிருந்து வடிந்தோடவில்லை. இதுவரை பழைமையான சுற்று நிருபத்தை வைத்தே நஷ்ட ஈடுகளை வழங்கத் தீர்மானித்துள்ளமை கவலையளிக்கிறது.

விவசாயிகள் பசளை உள்ளிட்ட பல விடயங்களுக்கு அதிகப் பணத்தினை செலவழித்தாலும், இவர்களுக்கு வழங்கும் நஷ்ட ஈடு போதுமானதாக இல்லை என நாம் அரசுக்கு அறியத் தருகிறோம்.

ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு போதுமானதாக இல்லை. சில இடங்களில் வயல்களில் மண் மூடியிருக்கிறது. வெள்ள நீர் வடியவில்லை. அதை நாம் நேரடியாகக் காண்கின்றோம். விவசாயிகளுக்கு எதிராகச் செயற்பட நினைக்க வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

டட்லி முதலாளி போன்றோர்களை வைத்து விலை தொடர்பில் கதைத்தார்கள். ஜனாதிபதி பல கருத்துக்களைச் சொன்னாலும், ஒளித்து வைக்கப்பட்டுள்ள நெல்லை வெளியில் கொண்டுவர முடியும். வெட்டும் நாட்கள் வரும் போது நெல் குறைந்த விலையிலேயே எடுக்கப்படுகிறது. உற்பத்தி விலையைக் குறைப்பதற்கான ஏற்பாட்டினை அரசு மேற்கொள்ள வேண்டும் என தேசிய கமக்கார அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

# அகல் விளக்குகளில் தீபச்சுடரேந்தி பிரார்த்தனை

இனம், மதம், மொழிகளுக்கு அப்பால், மனிதநேயமும் அன்புமே உடையவர்களாக நல்லிணக்கத்தோடு எதிர்கால சந்ததியைப் கட்டியெழுப்புவதற்காக நடைபெற்ற நிகழ்வானது சர்வமத தலைவர்களின் பிரார்த்தனையோடு ஆரம்பமானது.

பின்னர் அதிதிகள் உரையைத் தொடர்ந்து, அனைவரும் இணைந்து அனர்த்தத்தின் போது உயிர் நீத்த உறவுகளின் ஆத்மா சாந்தி அடையவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கவும் அகல் விளக்குகளில் தீபச்சுடரேந்தி பிரார்த்தனைகள் இடம்பெற்றதோடு உயிர்களைக் காக்க களப்பணி செய்த வீரர்களும் நினைவு கூரப்பட்டனர்.

இந்நிகழ்வில் சர்வ மத மதகுருமார்கள், அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா , அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தன, மேலதிக அரசாங்க அதிபர் சிவ ஜெகராஜன் , கல்முனை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணன், திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் , மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜ், முன்னாள் அரசாங்க அதிபர்கள், காரைதீவு பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி உபுல் சாணக, ஆலய பரிபாலன சபையினர், இந்து மாமன்ற உறுப்பினர்கள், உலமா சபைகளின் நிர்வாகிகள், ராவணா அமைப்பினர், உயிர் நீத்த உறவுகளின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# திறந்த நீதிமன்றில் பகிரங்க மன்னிப்பு கேட்டார் லொஹான்

கடுமையாகத் திட்டிய குற்றச்சாட்டின் கீழ், கோட்டை நீதவான் நீதிமன்றத்தில், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, லொஹான் ரத்வத்த, மேற்கண்டவாறு பகிரங்க மன்னிப்பு கோரினார்.

வழக்கின் பிரதிவாதியான லொஹான் ரத்வத்த, பாதிக்கப்பட்ட தரப்புக்கு 10 இலட்சம் ரூபாய் கொடுப்பதற்குத் தயார் என்றும், இந்த முரண்பாட்டைத் தீர்க்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட அகலக்க உகவத்த மற்றும் அவருடைய கனிஷ்ட சட்டத்தணிக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் குழு, நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

முன்வைக்கப்பட்ட சகல காரணங்களையும் ஆராய்ந்த கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி, 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணையில் லொஹான் ரத்வத்தையை விடுவிப்பதற்கு உத்தரவிட்டார்.

இந்நிலையில், இலக்கத் தகடு இல்லாத சொகுசு வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் முன்னதாக கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் வியாழக்கிழமை (05) பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

# ஒவ்வொரு நாளும் ஓடும்

கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் அதிகாலை 5.30 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட ரயிலானது யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை முற்பகல் 11.15 மணிக்கு வந்தடையும். அதன் பின்னர் காங்கேசன் துறையிலிருந்து மதியம் 12.34ற்கு தனது சேவையை ஆரம்பிக்கும். இந்த ரயில் இரவு 7.20 மணிக்கு மீண்டும் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தைச் சென்றடைகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிக்கும் ரயில் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் தனது பயணத்தை நிறைவு செய்கிறது. இருப்பினும் கல்கிஸை வரை பயணம் செய்யும் பயணிகள் புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து மற்றொரு வாகனத்தின் ஊடாக பயணத்தை மேற்கொள்ள வேண்டிய சூழல் இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதிகளவாகப் பயணம் செய்யும் பயணிகள் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளான வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கல்கிஸை ஆகிய பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

தொடர்ச்சியான சேவையை கல்கிஸை வரை வழங்குவதன் ஊடாக தம்மால் இலகுவாகப் பயணம் செய்ய முடியும் எனவும் அதனை நிவர்த்தி செய்வதற்குப் புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

# எம்.பி. வாகனத்தில் மோதி பெண் மரணம்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வாகனத்தில் திங்கட்கிழமை (08) பயணித்துக் கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னப்பலத்தின் சாரதியான ஹுன்னஸ்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிறுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிடியாணையில் இருந்தவரை பிடித்ததனால் பதற்றம்

அங்கு நிற்பதைப் அவதானித்த வவுனியா பொலிஸார் அவரை மடக்கிப் பிடித்தனர். இதன்போது அந்த பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

எனினும், கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதேவேளை கைது நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டபோது அந்த பகுதியில் அலைபேசியில் ஒளிப்படம் எடுத்து, குழப்பம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில், மேலும் இரண்டு பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை, விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிறுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அமெரிக்கா ஆதரவளிக்கும்

பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த அமெரிக்காவின் ஆதரவை எதிர்காலத்திலும் எதிர்பார்ப்பதாக சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் முன்னேற்றம் மற்றும் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதில் அமெரிக்கா தொடர்ந்தும் உதவி வழங்கும் என்றும் தூதுக் குழுவினர் உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரமைப்பின் இலங்கைக்கான பணியகத்தின் பணிப்பாளர் கேப்ரியல் க்ரொவ், சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளர் ரத்னபிரிய அபேசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அரசியலை நீக்குவேன்

தேசிய வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் விளையாட்டுக்கள் தேக்கமடையாமல் விளையாட்டுக் கழகங்களில் நிலவும் பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்படும் என்றும், விளையாட்டின் மூலம் முன்னேறக்கூடிய அழகான நாட்டிற்குள் வளமான நாட்டை உருவாக்கும் தேசிய நோக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திலகரத்ன குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன மேலும் தெரிவிக்கையில், வில்வித்தை போன்ற எமது நாட்டின் அனைத்து விளையாட்டுகளையும் சர்வதேச வெற்றிக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சிற்கு உள்ளது எனவும், 2028 ஆம் ஆண்டை ஒலிம்பிக் நம்பிக்கைகளைக் கொண்ட ஆண்டாக மாற்ற வேண்டும் எனவும் அனைவரும் ஒன்றிணைந்து அதனை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# புதிய வருமான வழி இரத்தா? இல்லையா?

அந்த அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

சுதந்திரத்திற்குப் பிறகு, 2022ஆம் ஆண்டு வரை கலால் உரிமம் வழங்குவதற்கு அரசாங்கம் பணம் வசூலிக்கவில்லை. அப்போது, நாட்டில் நேரடி வரியை இழக்கும் போக்கு காட்டப்பட்டது. அப்போது, நாடு நிலவும் கடுமையான பொருளாதார திவால் நிலையிலிருந்து விடுபட உரிய நடவடிக்கை எடுக்குமாறு, வழிகள் மற்றும் வழிமுறைகளுக்கான பாராளுமன்றக் குழுவும் அரசுக்குத் தெரிவித்தது. அதன்படி, உடனடி நேரடி வரி இழப்புக்கு மாற்றாக, அரசு வருவாயை அதிகரிக்க, பணம் வசூலிக்கவும், கலால் உரிமம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

**“2024 பெப்ரவரி 1 முதல் 2024அக்டோபர் 31, வரை, புதிய திருத்தத்தின்படி, 172 மதுபானக் கடைகள் மற்றும் 89 மால்கள் அல்லது கடைகளுக்கு ரூ.1,000 மில்லியனுக்கும் அதிகமாக மதுபானங்களை விற்பனை செய்வதற்கான உரிமத்தின் கீழ் R.B.4 (F.L.4) இன் எக்சைஸ் உரிம வகைப்பாட்டின் கீழ். புதிய மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டன. இந்த உரிமங்கள் அனைத்தும் கலால் திணைக்களத்தின் விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் படி வழங்கப்பட்டுள்ளன**

2024ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில், கலால் நிர்வாக மேம்பாட்டு முறை மற்றும் வரிக் கொள்கை திருத்தம், பல்வேறு வகையான கலால் உரிமங்களுக்குப் பொருந்தும் வழிகாட்டுதல்களை நெறிப்படுத்துதல், புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்துதல், உரிமங்களைப் பெறுவதற்கான வரம்புகளை நிர்ணயித்தல், நிர்வாகக் கட்டணங்களை வழங்குதல் கோரிக்கைக்கு ஏற்ப உரிய உரிமக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் அடங்கிய வரவு-செலவுத் திட்ட ஆவணத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றியதுடன், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கும் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

அரசியலமைப்பின் பிரிவுகள் 148 முதல் 152 வரை, பொது நிதிக் கட்டுப்பாட்டின் மீது பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் உள்ளது. இது தவிர, பொது நிதிப் பொறுப்பு சட்டத்தின் பிரிவு 3, அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகவும் செயல்படுகிறது. மேலும், பொருளாதார மாற்றுச் சட்டத்தின் 8ஆவது பிரிவின் கீழ், அமைச்சர்கள் குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதை மேற்பார்வையிடப் பாராளுமன்றத்திற்கு உரிமை உண்டு.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டு எடுக்கும் நோக்கில் அமல்படுத்தப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு வலுசேர்க்கும் வகையில், கலால் கட்டளைச் சட்டத்தின் கீழ் 03/2024ஆம் இலக்க கலால் அறிக்கையானது ஏற்கனவே உள்ள கட்டணங்களை அதிகரித்து, புதிய திருத்தங்களை 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 1 முதல் நடைமுறைப்படுத்தி உள்ளது.

இவை அனைத்தும் பொருளாதார மேம்பாட்டுக் சட்டத்தின் பிரிவு 4 இன் துணைப் பிரிவுகளின் d மற்றும் h இன் படி செய்யப்பட்டுள்ளன. மேலும், 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 10, திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு எண். 1544/17 (கலால் அறிவிப்பு எண். 902) மூலம் வெளியிடப்பட்ட விதிமுறைகள் 2024ஆம் ஆண்டு ஜனவரி 12, திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2366/39 மூலம் திருத்தப்பட்டன. அவை அனைத்தும் பாராளுமன்றத்தின் பொது நிதிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்படி, மாநகர சபை அதிகார வரம்புகளுக்கு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அறவிடப்படும் 15 மில்லியன் ரூபாய் கட்டணத்திற்கு மேலதிகமாக, வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணமாக 1 மில்லியன் ரூபாவும், 05 இலட்சம் ரூபாய் பாதுகாப்பு வைப்புத் தொகையும்,

நகராட்சி அதிகார வரம்புகளுக்கு வணிகத்தில் நுழைவதற்கு வசூலிக்கப்படும் ரூ.10 மில்லியன் கட்டணத்துடன், கூடுதலாக ரூ.08 இலட்சம் வருடாந்திர உரிமக் கட்டணம் மற்றும் ரூ.05 இலட்சம் பாதுகாப்பு வைப்புத்தொகை,

ஏனைய பகுதிகளுக்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அறவிடப்படும் ஒரு மில்லியன் ரூபாய் கட்டணத்திற்கு மேலதிகமாக வருடாந்த அனுமதிப்பத்திரம் 06 இலட்சம் ரூபாய் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை 05 இலட்சம் ரூபாய், 1,000 மில்லியனுக்கும் அதிகமான வணிக வளாகங்கள் அல்லது கடைகளுக்கு, வணிகத்தில் நுழையும் போது, வசூலிக்கப்பட்ட 15 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக, வருடாந்த உரிமக் கட்டணமாக 1.5 மில்லியன் ரூபாவும், 05 இலட்சம் ரூபா பாதுகாப்பு வைப்புத் தொகையும் வழங்கப்பட்டன. மதுபானங்களின் சில்லறை விற்பனை வெளியிடப்பட்டது.

2024 பெப்ரவரி 1 முதல் 2024அக்டோபர் 31, வரை, புதிய திருத்தத்தின்படி, 172 மதுபானக் கடைகள் மற்றும் 89 மால்கள் அல்லது கடைகளுக்கு ரூ.1,000 மில்லியனுக்கும் அதிகமாக மதுபானங்களை விற்பனை செய்வதற்கான உரிமத்தின் கீழ் R.B.4 (F.L.4) இன் எக்சைஸ் உரிம வகைப்பாட்டின் கீழ். புதிய மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டன.

இந்த உரிமங்கள் அனைத்தும் கலால் திணைக்களத்தின் விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் படி வழங்கப்பட்டுள்ளன. உரிமம் வழங்கும் போது, கலால் ஆணையர் ஜெனரல் பரிந்துரைத்த விண்ணப்பங்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டது. அந்த அமைப்புக்கு வெளியே ஒரு கலால் உரிமம் கூட வழங்கப்படவில்லை.

இது தொடர்புடைய ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 3.1 பில்லியன் ரூபாவை கொண்டு வந்துள்ளது. 2024ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்த முறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டால், 2024ஆம் ஆண்டில் அரசாங்கம் 04 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தைப் பெற முடியும்.

இந்த முறையின் வெற்றி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டு முதல் 250-300 கலால் உரிமங்கள் ஏல அடிப்படையில் குறைந்தபட்சம் 25 மில்லியன் ரூபாய் ஏலத்தில் வழங்கப்படும், மேலும் 25 சதவீத வருமானத்தில் இருந்து ஒரு நிதி ஒதுக்கப்படும். நிதானமான இயக்கத்தை ஊக்குவிக்கவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டது மேலும் இந்த பணிகள் நடைபெற்று வரும் நிலையில் புதிய கலால் சட்டம் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டன.

வழங்கப்பட்ட மதுபான உரிமம் தொடர்பாகக் கலால் திணைக்களத்திற்குக் கிடைத்த பொது முறைப்பாடுகளின் அடிப்படையில் கலால் ஆணையாளர் நாயகம் உரிமத்தை இடைநிறுத்துவதற்கு 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9, அன்று உரிமம் பெற்றவர் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

2024.07.26 முதல் 2024.09.21 வரை) மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டால் முறையானவை தேர்தல் ஆணையம் 19.08.2024 திகதியிட்ட கடிதத்தின் மூலம் கலால் ஆணையர் ஜெனரலுக்கு ஒரு நடைமுறையைப் பின்பற்றி வெளிப்படையான முறையில் அரசியல் பதவி உயர்வு இல்லாத உரிமங்களை வழங்குவதற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் போது மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. என்ன நடந்தது என்றால், அவை விற்கப்பட்டு கணிசமான தொகை மாநில வருவாயில் வசூலிக்கப்பட்டது. நாடு பொருளாதார சிக்கலிலிருந்த நேரத்தில் வரி வருமானத்திற்கு மேலதிகமாக நாட்டிற்கு வருமானத்தைக் கொண்டு வரும் புதிய உத்தியாக இந்த உரிமங்கள் விற்பனை செய்யப்பட்டன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வங்குரோத்து நிலையில் உள்ள பொருளாதாரத்தை மீட்பதற்காக நீண்ட கால நோக்குடன் செயற்படுத்தப்பட்ட இந்த கலால் உரிமம் வழங்கும் நடைமுறை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தப்படுவது வருத்தமளிக்கிறது.

தற்போதைய செயல்பாடு வெளிப்படையானது மற்றும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய வருமான வழியை இரத்து செய்வதா, இல்லையா என்பது தொடர்பில், அவ்வாறு இல்லையேல் புதிய கலால் வரி சட்டத்தை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பது தொடர்பில் பாராளுமன்ற அனுமதியுடன் அமைச்சரவை நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், இதனை முன்னெடுத்துச் செல்வதற்கோ அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம், அமைச்சரவைக்கு உரித்துடையது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் மரணம்

அநுராதபுரம், இப்பலோகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வலவ்வேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (08) மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சனிக்கிழமை (07) இரவு தனது வீட்டில் மற்றுமொரு நபருடன் இணைந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த மரணம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒருங்கிணைப்பு தலைவரானார்

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



இரத்தினபுரி மாவட்ட கொடகவெல பிரதேச செயலக பிரிவின் கொடகவெல, ஒபநாயக்க, வெலிகபொல . பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் இருந்து நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் "கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினர் மக்கள் சேவையை "மாற்றான் தாய் மனப்பான்மையோடு" மேற்கொண்டனர். எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளின் அடிப்படையில் தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்புடையதாகப் பிரதேச மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகல அபிவிருத்தி பணிகளையும் ஒருங்கிணைப்பு செய்து, அவற்றை பின் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வழிவகைகளை மேற்கொள்வதோடு சகல மக்களுக்கும் இன, மத, மொழி, பிரதேச வாதங்கள் கடந்து மேற்கொள்வேன்" என்றார்.

சுந்தரலிங்கம் பிரதீப், நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் 112,711 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் தெரிவாகிய முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பணி எழில் விழா



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை, காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வு நிலை அதிபர் த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியற்துறை சிரேஷ்ட பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரியில் 1994ஆம் ஆண்டு முதல் ஆசிரியராகப் பணியாற்றிய த.கலைச்செல்வன் 2021ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை (13ஆம் திகதி) அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

நவம்பரில்

# 184,158 சுற்றுலாப் பயணிகள் வருகை



இவ்வருடத்தில் நவம்பர் மாதத்தில் 184,158 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சுமார் 1,804,873 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், ரஷ்யா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

## 'இரத்த தானம் செய்வோம்; உயிரை காப்போம்'





கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் இயங்கிவரும் ஐ.டி.எம்.ஈஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் (IDM EASTERN CAMPUS) 6ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு, 'மனித உயிர் அரியது அதைக் காக்கும் இரத்தம் பெரியது இரத்த தானம் செய்வோம் உயிரைக் காப்போம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இரத்தத்தை தானமா வழங்கும் நிகழ்வு, மட்டக்களப்பு பயினர் வீதியிலுள்ள பல்கலைக்கழக கட்டிடத்தில் சனிக்கிழமை (07) இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் தே.சசிகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் அங்குக் கல்வி கற்றும் மாணவர்கள் மற்றும் ஐ.டி.எம். ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்தத்தைத் தானமாக வழங்கி வைத்தனர்.

## கிணற்றுக்குள் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் கற்கோவளம் - வராத்துப்பளை பகுதியில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் கம்பி வலையால் மூடப்பட்ட பொதுக் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தனது தாயாரை சனிக்கிழமை (07) பிற்பகலில் இருந்து காணவில்லை என அவரது குடும்பத்தினர் தேடிச் சென்ற வேளை கம்பி வலையால் மூடிய கிணற்றடிப் பகுதியில் தொலைபேசி சத்தம் ஒலித்த நிலையில் அந்த கிணற்றை அவரது மகன் எட்டிப் பார்த்த வேளை சடலம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாகக் காணப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தாயான விமலன் சிந்து என்கிற 42 வயதுடைய தாயார் ஆவார்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## நியமனம்...

கனகராசா சரவணன்

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக செயலாளராக ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரவினால் திங்கட்கிழமை (09) நியமித்து அவருக்கான நியமன கடிதத்தை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

## பொடி லெசீயின் அறைக்கு கைத்தொலைபேசிகள் மீட்பு

பூஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள பொடி லெசீ என்ற ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி அடைக்கப்பட்டுள்ள விசேட சிறை அறைக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சேதமாக்கப்பட்ட கை தொலைபேசி மற்றும் தொலைபேசி பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

பேட்டரி சார்ஜர், ஹேண்ட்-ஃப்ரீ மற்றும் இரண்டு டேட்டா கேபிள்களும் கைப்பற்றப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளன.

பூஸ்ஸ உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் கடமையாற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழு ஞாயிற்றுக்கிழமை (08)அன்று மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளிடம் கைவரிசை

## ஒருவர் கைது; நகைகள் மீட்பு

ரீ.எல்.ஜவ்பர்கான்

உள்நாட்டு சுற்றுலா பயணிகளிடம் நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்ட நபர் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.எஸ். ஏ.ரஹீம் தெரிவித்தார்

காலி - ஜின்தோட்டையைச் சேர்ந்த 30 பேர் கொண்ட சுற்றுலா குழுவினர் காத்தான்குடி சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது, சுற்றுலா விடுதியின் மதில் மேலாக உள்ளே நுழைந்து சுற்றுலாப் பயணிகளின் கைப்பையிலிருந்த பணம் மற்றும் அவர்களிடம் இருந்த நகைகளை கொள்ளையிட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது, 37 ஆயிரத்து 500 ரூபாய் மற்றும் 15,000 ஆயிரம் ரூபாய் என இருவரிடம் பணத்தையும், மேலும் சிலரிடம் நகைகளையும் கொள்ளை இட்டவுடன் மேலும் பலரிடம் அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் கொள்ளையிட்டுள்ளமை தெரியவந்துள்ளது. நகைகளை வாழைச்சேனையில் உள்ள நகைக்கடையில் விற்பனை செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# பரதநாட்டிய அரங்கேற்றம்

பரதநாட்டிய கலைஞரும் , நாட்டிய பூசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நர்த்தன வித்கரும், நுவரெலியாவில் சிறந்த நடனப்பள்ளி ஆசிரியருமான ரமேஷ் காந்தின் நெறியாள்கையில் நடைபெற்ற ஆறாவது பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நுவரெலியா மாநகர சபை (சினிசிட்டா) மண்டபத்தில் சனிக்கிழமை (07) காலை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு மஹரகமவை சேர்ந்த உதவி விரிவுரையாளரும் (பரதநாட்டியம்) அழகியல் துறை, தேசிய கல்வியின் எம்.ஆர். எஸ்.மித்திரநாதன் மற்றும் நுவரெலியா நம்மாதா உயர்நிலை பாடசாலை அதிபர் அருட்தந்தை சிவந்த் ரொட்ரிகோ சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

- செ.திவாகரன்





















# தேங்காயும் சோறும் சாப்பிடும் காலம் மீண்டும் மலர வேண்டும்

டிசெம்பர் மாதம் பிறந்து விட்டாலே, பண்டிகை காலம் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் பூப்பறிக்கும், வீடுகளுக்கு பூச்சு பூசுவது உட்பட புத்தாடைகளை கொள்வனவு செய்வது என்றெல்லாம், அடுக்கிக்கொண்டே போகலாம். அந்தளவுக்கு சந்தோஷமாக வருட இறுதி ஆரம்பமாகி, வருடமும் சந்தோஷமாகவே பிறக்கும்.

இந்நிலையில், நாட்டில் மிகப் பிரதானமான பண்டங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதில், அரிசி, தேங்காய்களின் விலைகளைக் கேட்டால், தலை சுற்றுகிறது. சாதாரண குடும்பத்தின் ஒருவேளை சாப்பாடு, தேங்காய் சம்பலுடன் சோறு, அதனைக்கூட உண்ண முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

சாதாரணமாகக் காலை வேளையில், தேங்காய் சம்பல் பாண் துண்டு சாப்பிட்டவர்கள், தேங்காய் சொதியுடன் இடியப்பம் சாப்பிட்டவர்கள், கடந்த பல நாட்களாகவே அதனைச் சாப்பிடுவதில்லை. சிற்றுண்டிச் சாலைகளிலும் வீதியோர கடைகளிலும், இவையிரண்டையும் காணக்கிடைப்பது இல்லை. அந்தளவுக்குத் தேங்காய் நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

ஒரு வேளையேனும் வாய்க்கு ருசியாகச் சாப்பிட வேண்டும் என நினைப்பவர்கள், சாப்பாடு ஏதாவது கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். பல உணவகங்களில், கறிகளின் வகைகளைக் குறைத்து விட்டனர். இவற்றுக்கெல்லாம் தேங்காய் விலையும் தட்டுப்பாடுமே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

இந்நிலையில், ஐந்து கிலோ கிராம் அரிசியும் மூன்று தேங்காய்களும் அடங்கிய பொதியை சதொச விற்பனை செய்கிறது. சதொச என்பது அரசாங்கத்துக்குச் சொந்தமான சில்லறை விற்பனைக் கடைகளின் சங்கிலியாகும். அதற்குப் பெரும்பாலானவர்கள் செல்வதில்லை. எனினும், சாதாரண மக்களும் சதொசவுக்கே செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

பொருட்களின் விலைகளைக் குறைத்து, விநியோகிக்கும் எண்ணிக்கையையும் சதொசவில் அதிகரித்தால், ஏனைய சில்லறைக் கடைகளில் விற்பனை குறையும். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின், சாதாரண விலைக்கு விற்பனைச் செய்வதற்கு முதலாளிமார்கள் முன்வருவார்கள், இது மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் நெருக்கடிகளைக் குறைக்கும்.

பற்றாக்குறையை உருவாக்கி பொருட்களின் விலையை உயர்த்துவது. மேலும் பழைய கையிருப்புகளைச் சந்தைக்குள் விடுவது. நவம்பர் தொடக்கத்தில் பற்றாக்குறை தொடங்குகிறது. அப்போது டிசம்பர் சீசனில் அந்த பொருளின் விலை அதிகமாக இருக்கும்.

இதனாலேயே டிசம்பர் வந்துவிட்டால் மக்கள் தலையில் நெருப்பு எரிகிறது. இதற்கிடையில், புதிய வணிக மாதிரிகள் மூலம் தங்கள் பாக்கெட்டுகளை சுத்தம் செய்யும் வணிகர் சமூகமும் உள்ளது. பொருட்களை விற்பதிலும் தள்ளுவதிலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. காலாவதியான உணவை ஜீரணித்து, அதை மறு பெயரிடும் பழக்கத்தை நாம் வெறுக்கிறோம்.

உணவுப் பணவீக்கம் தாக்குப் பிடிக்க முடியாத நிலையை எட்டியுள்ளதால், கிலோ கிராம் ஒன்றுக்கு பத்து ரூபாய் ஆதாயம் கிடைக்கும் என்று சொன்னால் மக்கள் அதன் பின்னால் ஓடுகிறார்கள். உணவுப் பாதுகாப்பு என்பது இனி அரசியல் முழக்கமாக இருக்கக் கூடாது.

ஒவ்வொரு நாளும் இந்தப் பிரச்சனைகளுடன் வாழ்வதுதான் நடக்கிறது. இவ்வாறான நிலைமைகள் எமது தோள்களில் சுமத்தப்படும் போது இந்த நாட்டில் ஒரு நிலையற்ற சூழல் உருவாகிறது. எனவே, இந்த யுகத்திலிருந்து முடிக்கப்பட வேண்டும். உணவுப் பிரச்சினைக்காக ஒரு நாடு செயற்பட்டால் அதன் பலன் இந்த நாட்டுக்கே தவிர அரசாங்கத்திற்கு அல்ல என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சிந்தனை ஓட்டங்கள் விஸ்தீரணம் அடையும்போது, அதனோடு இணைந்தவர்கள் பரோபகாரிகளாகி விடுகின்றனர். இது இயல்பான நிலைதான்.

நற்சிந்தனையுடன் தம்மைச் சுற்றியிருப்பவர்களின் நலன் பற்றி, அக்கறை கொண்டால், அதுவே அவர்களின் பரந்த நற்பண்பைத் தானாகவே மாற்றி விடுகின்றது.

எவராலுமே சிறப்பான வாழ்வை உருவாக்க முடியும். ஆனால், நடைமுறை வாழ்வில் பலவித பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எவருமே துன்பங்களை விரும்புவதில்லை. எனினும், இன்பங்களும் துன்பங்களும் வந்து போன வண்ணமே உள்ளன.

வாழ்க்கை என்பது அற்புதமான தேன் கூடு. பல்லாயிரம் தேனீக்கள், பலகோடி மலர்களிலிருந்து, தேனைச் சேகரிக்கின்றன. உழைப்பின் முழு வடிவத்தையும் இந்தச் செயற்பாடு உருவகிக்கின்றது. தேனீக்களின் இந்தத் தொண்டுக்கு, நிகர் பிறிதொன்றுமில்லை.

இதேபோலவே, மனித இனம், தன்னை வளப்படுத்தப் போராடிக்கொண்டே இருக்கின்றது. இந்தப் போராட்டத்தை, ஆதரிக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும்.

எனவே சிந்தனையாளர்கள் மனித இனத்தின் மீது அக்கறை செலுத்துவதும். அறிவுரை சொல்வதும் அவர்களது கடமையாகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் இவர்களாவர்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

மொஹமட் பாதுஷா

# மக்களின் அபிலாஷைகளும் புத்தம்புது எம்.பிக்களும்

சூழ்ந்திருந்திருந்த நாட்டை அனுரகுமார திசாநாயக்கவிடம் கையளிக்குமாறும், பாராளுமன்றத்தைச் சுத்தப்படுத்துமாறும் தேசிய மக்கள் சக்தி கட்சி வேண்டி நின்றது. மக்களும் இதனை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு இவ்விரண்டு வரப்பிரசாதங்களையும் மக்கள் வழங்கியுள்ளனர்.

இப்போது கைமாறாக அரசாங்கம் எவ்வளவு விரைவாக நாட்டை தூக்கி நிறுத்தப் போகின்றது? மக்களுக்கு என்ன பிரதிபலனைச் செய்யப் போகின்றது? புதிய எம்.பிக்கள் பழையவர்களை விட, எவ்வாறு செயற்றிறனாகச் செயற்படப் போகின்றனர்? என்பதையே மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக, சிறுபான்மை தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களது பாரம்பரிய அரசியல் வழித்தடத்திலிருந்து விலகி, தமது தனித்துவக் கட்சிகளுக்கு அளிக்கின்ற வாக்குகளில் ஒரு பகுதியை இந்த தேர்தலில் என்.பி.பிக்கு வழங்கியிருக்கின்றார்கள். எனவே, தம்முடைய அபிலாஷைகளை இப் புதிய அரசாங்கம் எவ்வாறு தீர்க்கப் போகின்றது என்று ஆவலோடு காத்திருக்கின்றனர்.

நாட்டில் 75 வருடங்களாக ஏற்பட்ட பின்னடைவுகளையும் சீர்குலைவுகளையும் இரண்டே மாதத்தில் சரிப்படுத்துவதற்கு அனுரகுமார அரசிடம் ‘அலாவுதீனின் அற்புத விளக்குகள்’ இல்லை. நடைமுறையில் அது சாத்திமும் இல்லை. ஏனென்றால், இந்த ‘முறைமை’ (சிஸ்டம்) என்பது நாட்டின் முதற் பிரஜையில் இருந்து கடைநிலை பொது மகன் வரை எல்லா மட்டங்களிலும் நாசமாக்கப்பட்டு இருக்கி;ன்றது. அதனை மாற்றியமைக்க காலமெடுக்கும்.

எவ்வாறிருப்பினும். சாதாரண மக்கள் இதுபற்றியெல்லாம் பெரிதாக ஆராய மாட்டார்கள். அனுரகுமார திசாநாயக்கவும் அக்கட்சியின் வேட்பாளர்களும் பிரசார மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை உடனே நிறைவேற்ற வேண்டும் என்றுதான் நினைக்கின்றார்கள் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

அந்த வகையிலேயே, நல்ல பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ள பின்னணியில் கூட, நாட்டில் எரிபொருள் விலை குறைக்கப்படவில்லை என்பது குறித்தும், தேங்காய், அரிசி உள்ளிட்ட பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் மற்றும் விலை அதிகரிப்புகள் குறித்தும் மக்கள் அங்கலாய்க்கத் தொடங்கியிருக்கின்றனர்.

உண்மையிலேயே மேடைகளில் எதை வேண்டுமென்றாலும் பேசலாம், ஆனால், அதிகாரக் கதிரையில் அமர்ந்த பிறகுதான் அதிலுள்ள வளைவு சுழிவுகள், நடைமுறை யதார்த்தங்கள் என்னவென்பதை அனுபவத்தில் காணமுடியும். சரியாகச் சொன்னால் இப்போது என்.பி.பி. அரசும் அந்த நிலையிலேயே இப்போது உள்ளது.

காலப் போக்கில் இது சரியாகிவிடும். அல்லது மக்கள் இதற்கும் பழக்கப்பட்டுப் போவார்கள். ஆனால், வேறு ஒரு கட்சி ஆட்சியமைத்து இப்படியான நிலைமைகள் ஏற்பட்டால் அதனை முதலில் விமர்சிக்கின்ற தலைவராக அனுரகுமார திசாநாயக்க இருந்திருப்பார். எனவே, இந்த அடிப்படையில், மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தை வினைத்திறனாக இயங்கச் செய்வதற்கும் பகிரதப் பிரயத்தனங்களை ஜனாதிபதி எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், இதனை இன்னும் விரைவுபடுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டியுள்ளது. அதற்கு எம்.பிக்களின் வகிபாகமும் முக்கியமானது.

புதிதாக நிறுவப்பட்ட ஒரு அரச இயந்திரம் உடனேயே முழுவீச்சில் இயங்க வேண்டுமாக இருந்தால், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், எம்.பிக்களின் விடய அறிவு மிக முக்கியமானது. 159 ஆசனங்களை வைத்திருந்தால் மட்டும் போதாது, அத்துடன் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்களும் தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

புதுமுகங்கள் என்றும், அதிக விருப்பு வாக்கு பெற்றவர்கள் என்றும் சொல்வதால் பயனில்லை மாறாக உடனடியாக அரச இயந்திரத்தில் ஒரு அங்கமாக இயங்குவதற்கு ஆளும் தரப்பு எம்..பிக்களும், பலமான பாராளுமன்றம் ஒன்றை முன்கொண்டு செல்வதற்கு எதிரணியினரும் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டிய தேவையுள்ளது. அதற்காகத் தேவையான முன்-தயார்ப்படுத்தல்களோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வர வேண்டும். நேரலையாக பாராளுமன்ற அமர்வுகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்ற ஒரு காலத்தில், மக்கள் பெரும் எதிர்பார்ப்புளோடு இருக்கின்ற வேளையில், அவர்கள் அங்கு வந்து ‘பழகிக் கொண்டிருக்க’ முடியாது.

இந்த முறை என்.பி.பி. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகள் ஊடாகவும் கிட்டத்தட்ட 150 புதியவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்துள்ளனர். மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமே பழைய முகங்கள் எனலாம். ஆகவே, பெருமளவுக்குபாராளுமன்றம் சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. இது நல்லதொரு மாற்றமும் சாதனையுமே.

ஆனால், இப்போது வந்திருக்கின்ற புதுமுகங்கள் எல்லோரும் வினைத்திறனான, களவு, பொய்யற்ற, ஊழலற்ற, மக்களுக்காகத் தியாகம் செய்யக் கூடியவர்களாகக் கடைசி வரையும் இருப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனென்றால், கடந்தகாலத்தில் ஆரம்பத்தில் நல்லவர்களாகத் தெரிந்த எம்.பிக்கள் பிறகு தலைகீழாக மாறியதும் உண்டு.

அதேபோல். முஸ்லிம் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவில்லையே என்று கோரப்பட்ட போது, ‘அவர்கள் புதியவர்கள், இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும்’ என்ற தோரணையில் அரச தரப்பில் பதில் கூறப்பட்டது. இருப்பினும், அரைவாசிக்கும் அதிகமான அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் அப்பதவியில் அனுபவமற்றவர்கள் என்பது கண்கூடு.

எனவே, புதியவர்கள் நியமிக்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது என்றாலும், ஒரு உயர் பதவியில் இருக்கின்றவர்களுக்கு அனுபவம் மிகப் பெரிய பலமாகும். அப்பதவியில் எவ்வாறு இயங்குவது, ஒரு சட்ட மூலத்தை, பிரேரணையை எவ்வாறு நகர்த்துவது என்பது தொடக்கம் பிரச்சினைகளைக் கையாள்வது வரை பல விடயங்கள் தொடர்பான அறிவு முன்கூட்டியே இருப்பது சிறப்பு. இல்லாவிட்டால் விரைவாக கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த பாராளுமன்றம் பல வழிகளில் விசேடமானது. என்.பி.பிக்கு அதிகப்படியான ஆசனங்கள், அதிக பெண் எம்.பிக்கள், மாற்றுத் திறனாளி ஒருவர் எம்.பியாக அங்கம் வகிக்கின்றமை, பெண் பிரதமர் என பல விடயங்களைச் சொல்லலாம். அத்துடன், படித்தவர்கள், துறைசார்ந்தவர்கள் அதிகமுள்ள நாடாளுமன்றமாகவும் கருதப்படுகின்றது. ஆனால், இவையெல்லாம் மக்களுக்குப் பிரதிபலனைக் கொடுக்கும் வரை இந்தப் பெருமைகளால் எந்த இலாபமும் இல்லை என்றே கூறலாம்.

பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பாக ஒருமுகப்படுத்தல் நிகழ்வு இடம்பெற்றதற்கு மேலதிகமாக சில முக்கிய பதவிகளில் இருப்பவர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. இதற்கிடையில், சபாநாயகரின் கல்வித் தகைமை பற்றிய சர்ச்சை எழுந்துள்ளது. இப் பாராளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் ‘எல்போட்’ என வர்ணிக்கின்றன.

இது இவ்வாறிருக்க, வேறுபல சம்பவங்களும் இடம்பெறுகின்றன. பாராளுமன்றத்தின் கன்னி அமர்வுக்கு வந்த ஒரு எம்.பி. எதிர்க்கட்சி தலைவரின் ஆசனத்திலிருந்து கொண்டு நேரலையாக முகநூலில் அதனை ஒளிபரப்புச் செய்தார். பாராளுமன்ற அதிகாரி வந்து சொன்னதை கூட ஆரம்பத்தில் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் ஓரிருவர் குறிப்பெடுத்துப் பேசுவதற்கே தடுமாறுவதைக் காண முடிகின்றது. அதுமட்டுமன்றி, அனுபவமுள்ள எம்.பி. ஒருவரே ஒரு பிரதேச சபையில் பேச வேண்டிய விடயத்தைச் சபையில் பேசுகின்றார். இன்னுமொரு சிங்கள எம்.பி. எழுந்து முஸ்லிம் தனியாள் சட்டம் பற்றி எல்லாம் தெரிந்தவர் போல, பேசுகின்றார். இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் பேசுவதும், பேசும் பாங்கும் எம்.பிக்களின் சிறப்புரிமையுடன் சம்பந்தப்பட்ட விடயம் ஆகும். ஆயினும், சமூகம் சார்ந்த எத்தனையோ விடயங்கள் இருக்கத்தக்கதாக அவற்றைப் பேசுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அத்துடன் சபையில் பேசும் பக்குவம், நடந்து கொள்ளும் ஒழுங்குமுறை குறித்தும் உடன் கற்றுக் கொள்ள வேண்டும்.

இன்னுமொரு முக்கிய விடயத்தையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, என்.பி.பி. கட்சியே ஆளும் கட்சியாக இருக்கின்ற காரணத்தினால் அந்தக் கட்சியின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள முஸ்லிம், தமிழ் எம்.பிக்கள் எவ்வாறு நடந்து கொள்வார்களோ என்ற கேள்வி மக்கள் மனதில் உள்ளது.

தமது சமூகத்தின் அபிலாஷைகளுக்காக பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் குரல் கொடுப்பார்களா? அல்லது தமக்கு எம்.பி.பதவியைப் பெற்றுத்தந்த கட்சியின் கட்டுக்கோப்பு, கொள்கைக்குக் கட்டுப்பட்டு அடக்கி வாசிப்பார்களா என்ற சந்தேகங்கள் இப்போது சமூக வலைத்தளங்களில் கூட முன்வைக்கப்படுகின்றன. இதற்கு அவர்கள் தமது செயலின் மூலமாகவே பதிலளிக்க வேண்டும். யாராவது ஒரு பதவிக்கு வந்தால், ஆரம்பத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவது இயல்பானதே. மறு புறத்தில், எத்தனையோ நல்ல மாற்றங்கள் நமது ஆளுகைக் கட்டமைப்பில் ஏற்பட்டிருக்கின்றன. செலவுக் குறைப்பு, பகட்டற்ற அரச தலைவர், வீண் விரயமற்ற அமைச்சர்கள், இனவாதத்திற்கு எதிரான கருத்துக்கள் என பல நல்ல விடயங்கள் நடந்திருப்பதை மறுதலிக்க முடியாது.

ஆயினும், அதனையும் மக்கள் அரசின் மீதும், எம்.பிக்களின் ஆளுமை மீதும் வைத்துள்ள எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்ய அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வளவு காலமும் விமர்சனங்களை முன்வைத்த கட்சி என்ற வகையில், நிலைமைகளைச் சுதாகரித்துக் கொண்டு அரசு மீதான விமர்சனங்களை மக்களின் அபிலாஷையாகக் கருதிச் செயற்பட வேண்டும். இரவு பகலாக ஜனாதிபதியும் அரசாங்கமும் பணியாற்றுகின்றார்கள் என்பதை மக்கள் அறிவார்கள். ஆனால், மக்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல அமைச்சர்களையும் எம்.பிக்களையும் ஏனைய அதிகாரிகளையும் தயார்ப்படுத்திக் கொண்டு தீயாய் வேலை செய்ய வேண்டும். அதற்காகவே மக்கள் காத்திருக்கின்றனர்.

## கடிதங்கள்

### மணிக்கூடு வேண்டும்



ஹட்டன் நகர் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டு கோபுரத்தில் உள்ள பாரிய மணிக்கூடு, பல வருடங்களாக செயலற்ற நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் பல வருட காலமாக மணிக்கூட்டு கோபுரம் காணப்படுகிறது. அதனால் அப்பகுதிக்கு வந்து செல்லும் மக்கள் நேரத்தை இலகுவாக பார்ப்பதற்கு வசதியாக இருந்தது. அத்துடன், நகரை அழகுப்படுத்தும் வகையில் காட்சியளித்தது.

இது குறித்து பல அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே, மணிகோபுரத்தை திருத்தி, சரியான நேரத்தை காண்பிக்கும் வகையில், மணிக்கூடொன்றை பொருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், அப்பிரதேச மக்கள் மட்டுமன்றி, ஹட்டன் நகருக்கு வந்துசெல்லும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- சுதத் எச்.எம்.ஹேவா

# வித்தியாசமின்றி மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்

**1914இலிருந்து 1918 வரையில் முதலாம் உலக போரையும், 1939இலிருந்து 1945 வரை இரண்டாம் உலக போரையும் உலகம் சந்தித்தது. இதையடுத்து, இதே போன்ற நிலை மீண்டும் தோன்றுவதை தடுக்கும் விதமாக உலக நாடுகள் ஒன்றுபட்டு பல முடிவுகளை எடுத்தன.**

அதன் ஒரு தொடர்ச்சியாக 1948இல் டிசெம்பர் 10ஆம் திகதியன்று, மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஐ.நா. பொதுச்சபை பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் நடைபெற்ற சந்திப்பில் ஏற்று கொண்டது.

தொடர்ந்து 1950இல் இந்த பிரகடனம் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து டிசம்பர் 10 'மனித உரிமை தினம்' என கொண்டாடப்படுகிறது.

உலகில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் அடிப்படை உரிமைகளை உணர்ந்து அவற்றைக் கோருவதற்கும், எந்த வித்தியாசங்களும், கட்டுப்பாடுகளும் இல்லாமல் சுதந்திரமாக வாழ்வதற்குமான நோக்கத்துடன் மனித உரிமை தினம் கொண்டாடப்படுகிறது. உலகளாவிய மனித உரிமை பிரகடனம் (UDHR) மக்களிடையே இனம், நிறம், மதம், பாலினம், மொழி, நாடு உள்ளிட்ட எந்த வித்தியாசமுமின்றி மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் போர், ரஷியா-உக்ரைன் போர், மியன்மார் உள்நாட்டுக் கலவரம், சூடான் உள்நாட்டுக் கலவரம் உள்ளிட்ட உலகளாவிய பதட்டமான சூழ்நிலையில் மனித உரிமைகளுக்கான அவசியம் மேலும் வலுவடைந்துள்ளது.

பிரகடனப்படுத்தப்பட்டு, 75 ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையில், இது குறித்து பேசிய ஐ.நா. கூட்டமைப்பின் தலைவர் வால்கர் டர்க் (Volker Turk), "உலகம் பல சிக்கல்களாலும், நெருக்கடியாலும் சூழப்பட்டிருந்தாலும் மனித உரிமைகள் தோற்கவில்லை" என கூறினார்.

இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல், நாடு, சமுதாய தோன்றல், சொத்து, பிறப்பு அல்லது சமூக உயர்வு போன்ற எந்த வித வேறுபாடுகளும் இன்றி, ஒவ்வொரு மனிதனும் வாழ்வதன் அவசியத்தையும் உணர்த்தவே இந்நாள் கொண்டாடப்படுகிறது.

அதாவது, மனித உரிமைகள் தினத்தில் மட்டும் அதைப்பற்றி சிந்திக்காமல் ஒவ்வொரு நாளும் மனித உரிமைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்படுத்தப்படவுள்ளது.

மனிதன் இயல்பாகவே சில பழக்க வழக்கங்களை கொண்டிருக்கின்றான். மனித உரிமைகள் இயல்பாகவே இருந்திருக்கின்றன. எனவேதான், யாராவது ஒரு நபர் இறந்து விட்டாலோ அல்லது ஏதாவதொரு சிக்கலில் மாட்டிக்கொண்டாலோ ஏனையவர்கள் அவ்வாறான துக்க நிகழ்வுகளில் பங்குகொண்டு அவர்களது துன்பங்களை தானும் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

அவ்வாறே, இன்பகரமான நிகழ்வுகளின் போதும் அவர்கள் செயற்படுகின்றார்கள். இவைகள் எவ்விடத்திலும் சட்டமாக வரையறுக்கப்படவில்லை. மற்றையவர்களின் இன்ப - துன்பங்களில் பங்குகொள்ளவில்லை என்பதற்காக, சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டு சட்ட ரீதியான நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, இவ்வாறான நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி கொள்வதற்காகவும் ஞாபகப்படுத்தி கொள்வதற்காகவும் பல உடன்படிக்கைகள், சட்டமூலங்கள் ஆவணங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

## அறிமுகம்

1945ஆம் ஆண்டுக்கு பின் நடைபெற்ற யுத்தத்தில் அணு ஆயுதங்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டதால் உலகுக்கு ஏற்பட்ட அழிவு மதிப்பிடப்பட முடியாத அளவு பாரியதாக அமைந்திருந்தது. இந்நிலைமையினால், எதிர்கால உலகின் நிலைபாட்டை தீர்மானிப்பதுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவென மூன்று துறைகள் இனங்காணப்பட்டன.

அதாவது, உலக சமாதானத்தை நிலைநாட்டுதல் (மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஏற்படுவதை தடுத்தல்), உலகப் பொருளாதார அபிவிருத்திக்காக சிறந்த செயற்திட்டமொன்றை ஏற்படுத்தல், மனித உரிமைகளை பாதுகாக்கும் கட்டமைப்பொன்றை இனங்காணல் போன்ற குறிக்கோள்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு சக்திவாய்ந்த சர்வதேச அமைப்பொன்று உருவாக்கப்படுவது அவசியம் என உலகத் தலைவர்கள் உணர்ந்தார்கள். அதன் பயனாக 'ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்' என்ற பெயரில் 1945ஆம் ஆண்டு புதிய அமைப்பொன்று உருவாக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யாப்பின் 55 (சி) உறுப்புரையில் மனித உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு சகல நாட்டு அரசினாலும் அதன் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கொள்கையளவிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கூறப்பட்ட உறுப்புரையில் விதந்துரைக்கப்பட்ட மனித உரிமைகளை பாதுகாக்கும் அரசாங்கம், விடய பொருளுக்குட்பட்ட 'மனித உரிமைகள்' என்னவென்று வெவ்வேறு அரசுகளால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பிரகடனங்களின் மூலம் அல்லது தேசிய சட்டங்களின் மூலம் ஓரளவு இனங்காணப்பட்ட போதிலும், முழுமையாக உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே அமைப்பின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட 'மனித உரிமைகள்' பரிகாரம் ஒன்று அப்பொழுது காணப்படவில்லை.

எனவே, மனித உரிமையை பாதுகாப்பதில் பெரும் இடைவெளி காணப்பட்டது. இந்த இடைவெளி 1948 டிசம்பர் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டபோதே நிரப்பப்பட்டது. அப்பொழுதிருந்தே மனித உரிமைகளை பாதுகாப்பது உலக மட்டத்தில் ஒரு கலாசாரமாக உருவெடுக்கும் பாரிய முயற்சியாக ஆரம்பமானது எனலாம்.

மனித உரிமைகள் விஸ்வமளாவியவை. அதாவது மனித உரிமைகள் மனிதர்கள் அனைவருக்கும் பொது என்பதே இதன் அர்த்தம். இது சாதாரணமான ஒரு பதப்பிரயோகம். விஸ்வம் என்பது அகில முழுமையையும் குறிக்கும். 'விஸ்வமளாவிய' என்னும் பதப்பிரயோகத்தின் கருத்து என்னவென்றால் மனித உரிமைகளை இன்று வாழும் சகல மனிதர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதாகும்.

மனித உரிமைகள் சர்வதேச பிரகடனம் 1948இல் வெளியாகியபோது இதன் விஸ்வமளாவிய தன்மை எதிர்கால இலட்சியமாக மட்டுமே இருந்தது. ஆனால், இன்றோ இது யதார்த்தமாகிவிட்டது. 1948இல் 52 நாடுகள் மட்டுமே ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகித்தன. இருந்தும் இன்று 193 நாடுகள் அதில் உறுப்பினர்களாக இருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தின் ஒரு நிபந்தனையாவது, ஒருவருக்கு இருக்க வேண்டிய இனம், பால், மொழி, சமயம் ஆகியவை சம்பந்தமான, உள்ளாந்த கௌரவத்தை உறுதிப்படுத்துவதாகும்.

எது எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்கள் அனைவரும் மனித உரிமைகள் சம்பந்தமாக ஒரே வகையான இணக்கப்பாட்டை கொண்டிருக்கிறார்கள் என்று இதற்கு அர்த்தம் கொள்ள முடியாது.

மனித உரிமைகள் பற்றிய முதலாவது அகில உலக மகாநாடு 1968இல் டெஹரானில் நடைபெற்றது. அப்போது மூலக்கோட்பாடு பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கவில்லை. எனினும் அது சம்பந்தமான விடயங்களிலேயே கருத்து முரண்பாடுகள் காணப்பட்டன. கடந்த இரு தசாப்தங்களாக உலகெங்கும் மனித உரிமைகளுக்கு மாபெரும் வரவேற்பு காணப்படுகின்றது. மனித உரிமைகள் சர்வதேச மட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டும், மேம்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டாலும் அதில்கூறப்பட்டுள்ளஉரிமைகளில்ஒன்றோபலவோ மீறப்படும் சந்தர்ப்பங்களில் அச்செயற்பாட்டுக்கு எதிராக சட்டத்தை நாடி நிவாரணங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் இல்லை.

ஏனெனில், அது ஒரு பிரகடனம் என்ற வகையிலேயே இதுவரையில் இருக்கின்றது. சட்டத்தின் மூலம் நிவாரணங்களை பெற வேண்டுமானால் மேற்படி சமவாயத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள உரிமைகளை அந்தந்த நாடுகளின் அரசியல் யாப்புக்குள் கொண்டுவரப்பட வேண்டும். அரசியல் யாப்பு என்பது ஒரு நாட்டின் மிக உயர்ந்த சட்டமாக கருதப்படுகின்றது. எனவே அவ்வாறு கருதப்படுகின்ற சட்டத்துக்குள் மனித உரிமைகள் கொண்டுவரப்படுமானால், அச்சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்ட ரீதியான நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் மனிதனுக்கு தேவையான அனைத்து உரிமைகளும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தும் ஆற்றல் அதன் அங்கத்துவ நாடுகளுக்கு இல்லாத காரணத்தால் சில முக்கிய உறுப்புரைகளை மட்டும் தெரிந்தெடுத்து அந்தந்த நாடுகளின் இயலுமைக்கு ஏற்றாற்போல் அரசியல் யாப்புக்குள் உட்படுத்தியிருக்கின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக ஐ.நாவின் சர்வதேச பிரகடனங்கள் மற்றும் சமவாயங்கள் ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் அங்கத்துவங்களால் பல சமவாயங்களும் பிரகடனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோன்று அவற்றை அதன் அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 1948 டிசம்பர் 10ஆம் திகதி அதன் பொதுச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிரகடனம் 30 உறுப்புரைகளை கொண்டுள்ளது. இப்பிரகடனத்தில் இலங்கை அரசும் கைச்சாத்திட்டுள்ளது.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 1948இல் உருவாக்கப்பட்டது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமானது தன்னளவிலான ஒரு உடன்படிக்கை மட்டுமேயாகும். அதில் குறிப்பிடப்படும் உரிமைகளை மேலும் உறுதிப்படுத்தி நிறைவேற்றி கொள்வதற்காக அதனுடன் இணைந்த சில சர்வதேச உடன்படிக்கைகளையும் பிறகு ஏற்படுத்தியுள்ளன.

அவற்றில் பெண்கள் உரிமைகள் பற்றிய சமவாயம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் என்பன மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இவற்றின் மூலம் உலகவாழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி பாதுகாத்துக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

யு.டி.எச்.ஆர்விலுள்ள உரிமைகளை குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் ஆகிய இரண்டு பிரதான பிரிவுகள் காணப்படுகின்றன.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தனி மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள காரணத்தால் பின்வரும் உரிமைகள் மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றன. உயிர் வாழ்வதற்கான உரிமை,அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவதற்கான உரிமை, சட்டத்தின் முன் சமம்,பேச்சு சுதந்திரம் மற்றும் மொழிச் சுதந்திரம், தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை மற்றும் சுகாதாரம் தொடர்பான உரிமை என்பனவாகும்.

ஆனால், இலங்கையில் இவ்வாறான உரிமைகள் இல்லை என்றே கூறலாம். வாழ்வாதார பிரச்சினை இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் அதிகரித்துள்ளது. அதை இன்று வரை ஈடுசெய்வதற்கு யாரும் முன்வரவில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில்லை. சட்டத்தை சிறந்த முறையில் கடைப்பிடிப்பதில் பொலிஸாரின் பங்களிப்பு கூடுதலாக காணப்படுகின்றது. ஆனால், பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் இலங்கையில் அதிகரித்து செல்கின்றன. குற்றங்களை மூடி மறைத்தல், குற்றத்துக்கு துணைபோதல் போன்ற விடயங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. பேச்சு சுதந்திரம் மற்றும் மொழிச் சுதந்திரம் ஆகியவற்றில் கொள்கையளவில் மேலும் முன்னேற்றம் தேவை. எமது நாட்டில் சகல துறைகளிலும் மொழி சுதந்திரத்தை கடைப்பிடிப்பது மிகக்குறைவாகவுள்ளது. தொழில் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான உரிமையில் அரசியல் தலையீடுகள் அதிகம் காணப்படுகின்றன. அதாவது தகுதிகளுக்கு அப்பால் தொழில் வழங்கப்படுகின்றது. அத்துடன் நிறுவனங்களுக்கு எதிராக முறையிடும் பொழுதும் அவர்கள் பாராமுகமாக செயற்படுவது, உரிமைகளை மீறும் செயற்பாடொன்றாகவே காணப்படுகின்றது. ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல ஐக்கிய நாடுகள் சபையால் காலத்துக்கு காலம் பல்வேறு சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளை உருவாக்கலாம். அவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு தத்தமது நாடுகளில் அமுல்படுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடு அதன் உறுப்பு நாடுகளுக்கு இல்லை. ஐ.நா. அங்கத்துவ நாடுகள் விரும்பினால் அந்த உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டு தங்களது நாட்டில் அவற்றை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அவ்வாறு ஏற்றுக்கொண்ட நாடுகளும் கூட தங்களது நாட்டின் வளங்கள், சூழ்நிலைகளுக்கு ஏற்பவே நடைமுறைப்படுத்துகின்றன. ஐ.நாவால் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் அனைத்தும் இப்படித்தான் அமுல்படுத்த வேண்டும் என்று அதன் அங்கத்துவ நாடுகளுக்கு கட்டளையிடும் அதிகாரம் ஐ.நா. சபைக்கு இல்லை. அப்படி தலையிடுவதாக இருந்தால், அது அந்தநாட்டின் இறைமையை பாதிப்பதாக கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. ஒரு நாடு சர்வதேச மனித உரிமைகளில் பிரகடனத்தில் சொல்லப்பட்ட சில விடயங்களை தனது அரசியல் யாப்பினுள் உள்ளடக்கி அமுல்படுத்தினாலும் நாட்டின் பாதுகாப்பு, சட்ட ஒழுங்குகள், குற்றவியல் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பும் கடமையும் அந்நாட்டுக்கு இருக்கின்றது.

இவைகளை தடுக்கும் முகமாக செயற்படும் போது பல்வேறு மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெறுகின்றமை உலகறிந்த உண்மையாக இருக்கின்றது. ஆனால், அவற்றை சுட்டிக்காட்டி கேள்விகளை கேட்பதற்கு ஐ.நா. சபையால் முடிகின்றதேயொழிய அச்செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அதற்கு அதிகாரம் இல்லை. எனவே, ஐ.நா. சபையின் அழுத்தம் ஒரு செல்லாக்காசாகவே இருக்கின்றமையை காணக்கூடியதாக உள்ளது.


மனித உரிமைகளை பாதுகாத்தலும் மேம்படுத்தலும் சர்வதேச ரீதியாக உறுதிப்படுத்தல். எந்தவொரு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கும் கிரமமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது மிகவும் முக்கியமாகும்.



# பூகோள மயமாதலும் தொழிலாளர் வர்க்கமும்



சௌந்தராஜன் துர்ஷாயினி,
இரண்டாம் வருடம்,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.




இன்று பூகோள மயமாதல் என்பது உலகின் அனைத்து துறைகளிலும் வியாபித்துள்ளதை எம்மால் கண்டு கொள்ள முடிகின்றது. உலகமானது ஒரு இடமாகக் கருதப்பட்டு சகல செயல்பாடுகளையும் ஒருமித்துச் செய்யக் கூடிய ஒரு அமைப்பாக உலக மயமாதலை குறிப்பிட முடியும்.

குறிப்பாக மக்களின் பொருளாதார மற்றும் சமூக, கலாசார, அரசியல், தொடர்பாடல் ஆகிய அம்சங்களில் ஏற்பட்ட வளர்ச்சியினை உலகமயமாதல் என சுருக்கமாகக் குறிப்பிட முடியும். அதாவது முழு உலகமும் சுருங்கி ஒரு கிராமமாக மாறியுள்ள செயற்பாட்டை பூகோள மயமாதல் எனலாம். பூகோள மயமாதலானது கோள மயமாதல், புவி மயமாதல், உலக மயமாதல், அகில மயமாதல், பூகோளக் கிராமம் என பல்வகைப்பட்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பூகோள மயமாதலானது எல்லைகளற்ற விதத்தில் சகல நாடுகளும் ஒரு அலகாக்கப்பட்டு அங்கு நவீனத் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு ஆகியன வலைப்பின்னலாய் பின்னிப்பிணைந்து உலகை ஒரு கிராமமாக மாற்றுகின்றது. உலகமயமாதலினால் தொழிலாளர் வர்க்கம் அடைந்த நன்மை தீமைகளைப் பற்றி ஆராய்ந்து நோக்குவோம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் புரட்சியானது உலக மயமாதலின் ஆரம்பக் கட்டம் எனலாம். பிற்பட்ட காலத்தில் இக் கைத்தொழில் புரட்சியானது இரும்பு, நிலக்கரி, இறப்பர் மற்றும் பெருந்தோட்டத் துறை என ஒவ்வொரு துறைகளிலும் வளர்ச்சி கண்டது. கைத்தொழில் புரட்சியின் மூலமாக ஏற்பட்ட வளர்ச்சியானது பிற்பட்ட காலத்தில் நவீன சாதனங்கள் கண்டுபிடிக்க காரணமாகியது.

அத்தகைய நவீன சாதனங்களே தற்காலத்தில் எல்லைகளைத் தாண்டி முழு உலகத்தையும் கண்காணித்து நிர்வகிப்பதோடு உலகத்தைக் கிராமம் என்ற அளவில் சுருக்கியுள்ளது.

இக் கைத்தொழில் புரட்சியின் ஒரு புதிய வருகையாகத் தொழிலாளர் வர்க்கம் மற்றும் முதலாளி வர்க்கம் என இரு வர்க்கங்கள் தோற்றம் பெற்றமையினை குறிப்பிட முடியும்.

தொழிலாளர் வர்க்கம் என்பது பெரும்பாலும் சுயம் ஒருங்கிணைக்கப்பட்ட வேலையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வர்க்கமாகும். உலகமயமாதலின் ஆரம்பக் கட்டத்தில் முதலாளி வர்க்கத்தினரால் தொழிலாளர் வர்க்கமானது அடக்குமுறை மற்றும் அதிக நேரம் வேலை, குறைந்த கூலி போன்ற பல்வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பிரச்சினைகளுக்கு எதிராக அக்காலத்தில் பல்வேறுபட்ட போராட்டங்களும் கருத்தியல்களும் தோற்றம் பெற்றன. உதாரணமாக கார்ல் மார்க்ஸ் மற்றும் ஏங்கல் என்போர் இவ் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். பிற்பட்ட காலத்தில் பூகோள மயமாதலின் விளைவாகத் தொழிலாளர் வர்க்கம் பல நன்மைகளையும் சிற்சில தீமைகளையும் அடைந்தனர். பூகோள மயமாதலானது அபிவிருத்தி அடைந்து வருகின்றபோது அதனோடு இணைந்த வகையில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலையும் அவர்களுக்குச் சாதகமான முறையில் மாற்றமடைந்தது எனலாம். பூகோள மயமாதலினால் தொழிலாளர் வர்க்கம் அடைந்த நன்மைகளாக உலகம் முழுவதும் சந்தைகள் விரிந்தன.

பல நாடுகளில் தொழிலாளர்கள் புதிதாகத் தொழில் வாய்ப்புகளைப் பெறுகின்றனர்,தொழிலாளர்கள் புது தொழில்நுட்பங்கள், பயிற்சிகள், மற்றும் திறன்களை கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு பெற்றுள்ளனர். இதனால் வேலைகளின் தரம் மேம்பட்டுள்ளது.

தொழிலாளர் வர்க்கம் சர்வதேசச் சந்தைக்குப் பொருட்களை வழங்குவதால், உற்பத்தித் திறன் அதிகரித்து, வேகமாக வளர்ச்சி அடைகிறது.சர்வதேச போட்டி காரணமாகப் பொருட்களின் விலை குறைவாக இருப்பதால், தொழிலாளர்கள் குறைந்த விலைகளில் சிறந்த தரமான பொருட்களை வாங்க முடிகிறது.

பூகோள மயமாதலின் தீமைகளாக விவசாயம், தொடர்பாடல், பொழுதுபோக்கு, போக்குவரத்து மற்றும் கைத்தொழில் போன்ற பலவகைப்பட்ட துறைகளிலும் பாரிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் முழுமையாக அனைத்து தொழில்துறைகளும் இயந்திரமயமாக்கப்பட்டது.

இதனால் இதுவரை காலமும் தொழிற்துறையில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் வர்க்கமானது பாரிய நெருக்கடிக்கு உள்ளாகினர். இந்நிலை தீவிரமடைந்ததால் தொழிலாளர் புரட்சி மற்றும் எதிர்ப்புகள் போன்றன தோற்றம் பெற்றன.


வேலை பாதுகாப்பின் குறைவு,குறைந்த ஊதியம் அதாவது சில சர்வதேச நிறுவனங்கள் மலிவு தொழிலாளர்களைப் பயன்படுத்துவதால், குறிப்பாக மலேசியா, இந்தியா, வியட்னாம் போன்ற நாடுகளில், தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியம் மட்டுமே வழங்கப்படுகிறது.

அழுத்தம் மற்றும் வேலை நேரம் அதிகரித்தல் அதாவது, அதிக போட்டி மற்றும் உற்பத்தி தேவை காரணமாகத் தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய சூழல் உருவாகிறது, இது உடல் மற்றும் மன நலன் பாதிக்கக்கூடியது. தொழிலாளர் சங்கங்கள் மற்றும் தொழிலாளர் உரிமைகள் சுருக்கப்படுகின்றன, ஏனெனில், சர்வதேசச் சந்தை அழுத்தங்கள் காரணமாகத் தொழில் உரிமைகள் மற்றும் நியாயமான வேலைவாய்ப்புகள் குறைகின்றன.

ஆரம்பக் காலத்தில் ஆண்டான் அடிமை என என சமூகத்தில் பிரிக்கப்பட்டு வந்ததன் பிற்பட்ட காலத்தில் பூகோள மயமாதலின் விருத்தியால் நன்மையாக அமைந்தாலும் பின்பு உலகமயமாதலால் ஏற்பட்ட பாரிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதன வளர்ச்சி தொழிலாளர் வர்க்கத்திற்குத் தீமைகளையும் ஏற்படுத்தியது.

எனவே தொகுத்து நோக்கின் ஆரம்பக் காலத்தில் தொழிலாளர் வர்க்கத்திற்கு இருந்த பாரிய பிரச்சனைகள் பூகோள மயமாதலினால் குறைவடைந்தாலும் தொழிலாளர் வர்க்கத்திற்கு முழுமையான சாதகமாக அமையவில்லை என்பதே உண்மையான கருத்தாகும்.

உலகமயமாதலானது திறமை வாய்ந்தவர்கள் மட்டுமே தகுந்த வேலை பார்க்கக் கூடிய சூழலை உருவாக்கியுள்ளது.






# தொலைபேசியால் விரிசலாகும் உறவுகள்



ரம்மியா புஸ்பாகரன்,
2ஆம் வருடம்,
இரண்டாம் அரையாண்டு,
யாழ் பல்கலைக்கழகம்.

ஒற்றைத் தொலைபேசியினூடாக உலகத்தின் எந்த மூலையில் என்ன நடந்தாலும் பார்த்து அறிந்து கொள்ள முடிகின்றது என்பதனால் தான் தொலைபேசியையே உலகமாக நினைத்து விட்டனரோ? என்று தான் புரியவில்லை.

தொழில்நுட்ப வளர்ச்சியைக் கண்டு ஒரு கணம் பெருமிதம் கொண்டாலும், மறுகணமே அதன் வளர்ச்சி ஏன் வந்தது என்று நினைக்குமளவிற்கு அதன் விந்தைகள் சற்று ஆழ்ந்து சிந்திக்க வைத்துள்ளன. கூட்டாக இருந்து கூடிச் சிரித்து மகிழ்ந்த காலம் மாறி, பரபரப்பாக ஓடித் திரிந்து பின்னர், நான்கு சுவரிற்குள் வந்து முடங்கி இருக்கும் வாழ்க்கைக்கு வித்திட்டிருக்கின்றது.

வீட்டிற்கு வந்த பின்னரும் உறவுகளோடு ஆறுதல் வார்த்தைகள் பேசி அமர்ந்திருக்காமல் தொலைபேசி மீதான நாட்டமே வார்த்தைகளை மட்டுப்படுத்தியிருக்கின்றது. சின்னஞ் சிறார்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரது கையிலும் தொலைபேசியானது ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றது.

காலை எழுந்தது முதல் இரவு நித்திரைக்குச் செல்லும் வரை தொலைபேசி இல்லாமல் இருப்பது அதிகளவானோருக்கு என்னவோ உயிர் இல்லாத உடலைப் போல இருக்கின்றது. காலை எழுந்தவுடன் வீட்டில் இருப்பவர்களோடு அந்த நாளைத் தொடங்குவதையும் தாண்டி தொலைபேசியோடு அந்த நாளைத் தொடங்கினால் மாத்திரமே அவர்களுக்கு அது விடியலாக அமைகின்றது. வீட்டில் எண்ணிக்கையைச் சேர்ப்பதற்காக மட்டுமே வீட்டினுடைய நபர்களாக இருக்கின்றனர். பொதுவாக எல்லோரது வீட்டிலும் தொலைபேசி ஒரு நபராகவே மாறி இருக்கின்றது.



ஒருவர் தொலைபேசியோடு விழுந்தால் அந்த நபருக்கு ஏதாவது நடந்திருக்குமா? என்று விசாரிப்பதைக் காட்டிலும் தொலைபேசிக்கு ஏதேனும் நடந்து விட்டதா? என்று பதறி அடித்தபடி கேட்கும் அளவிற்கு தொலைபேசி மீது உள்ள அக்கறை ஒரு நபருக்கு இருப்பதில்லை என்பதை நினைக்கையில் தான் சற்று வேதனையளிக்கின்றது.

கூட்டுக் குடும்பமாயினும் சரி, கருக் குடும்பமாயினும் சரி எல்லைகளைத் தாண்டி கதைத்து மகிழ்ந்து நினைவுகளைப் பொக்கிஷமாகச் சேமித்த அந்த அழகிய நாட்கள் எல்லாம் இன்று தொலைபேசிப் பாவனை அதிகரித்தமையினால் சற்று மழுங்கடிக்கப்பட்டதனை யாராலும் மறுத்து விட முடியாது. ஒரே வீட்டிலிருந்து கொண்டு உணவருந்த அழைப்பதற்குக் கூட தொலைபேசி அழைப்பின் மூலமே வீட்டில்

இருப்பவர்களை அழைக்கின்ற நிலைமை வந்துள்ளது. முன்னைய காலங்களில் எல்லாம் தொலைபேசி இல்லாமல் இருந்த நிலைமையில் மகிழ்ச்சியான வாழ்க்கைக்குப் பஞ்சமே இருந்ததில்லை எனலாம். விட்டுக்கொடுத்தலும், புரிந்துணர்வும், ஒரு பிரச்சினை வந்தால் அதனைத் தீர்த்துக் கொள்ளும் பக்குவமும் அவர்களிடம் தாராளமாகவே இருந்தது.

இன்றைய காலச் சூழலில் பெரும்பாலும் வருகின்ற பிரச்சனைகள் எல்லாமே தொலைபேசியின் ஊடாகத்தான் வருகின்றது. குடும்ப நிலை பிளவுண்டு காணப்படுவதற்கும் அது முக்கியமான காரணியாக உருவெடுத்து இருக்கின்றது.

ஒருவரது பிறந்த தினத்தைக் கூட இன்றைய அளவில் தொலைபேசி தான் ஞாபகப்படுத்துகின்றது. வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமைக்கு மனித சமூகமானது மாறி இருக்கின்றது. உணவை உட்கொள்ளும் பொழுதாவது அந்தத் தொலைபேசியை மறந்து இருக்க முடியவில்லை. கணவன், மனைவி உறவுக்கிடையிலான சண்டை, சந்தேகம் என்பன தோன்றுவதற்கான மூலாதாரமாகத் தொலைபேசியை காணப்படுகின்றது.

தொலைபேசி மீது உள்ள நாட்டத்தினால் வீட்டில் இருப்பவர்களை கூட சரியாக கவனித்துக்கொள்ள முடிவதில்லை.இதனால் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைவதனையும் காணலாம். ஆக மொத்தத்தில், விரிசலை நோக்கிய பயணமாகவே குடும்பத்தின் உறவு நிலை தொலைபேசியினால் மாற்றப்பட்டுள்ளது.

கணவன் அல்லது மனைவி யாராவது ஒருவர் தொலைபேசி மூலமாக வேறு ஒரு தொடர்பு கிடைக்கும் பொழுது அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும் பொழுது அது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்குகின்றது.

உலகளாவிய ரீதியில் இதைப் பற்றிய பல செய்திகளை நாம் அறிந்திருப்போம். நாளை நமக்கும் அந்த நிலை வந்து விடமாட்டாது என்று நிச்சயமாகக் கூறி விட முடியாது. எதுவாயினும் வருமுன் காப்பதே சாலச் சிறந்தது.

இன்றைய காலச் சூழலில் தனித்தனியே வசித்துக் கொள்ள அறைகள் இருக்கும் அதேவேளை, தனித்தனி நபருக்கு என்றும் தொலைபேசி இருப்பதனால் அவரவர் வேலைகளை அவரவர்களே பார்த்தபடி கடந்து செல்கையிலே உதவிக்காக மற்றொருவரை அழைப்பதையும், மற்றவரின் நலனில் அக்கறை செலுத்துவதையும் மறந்து விட்டனர்.

ஒரே அறையில் அமர்ந்து இருந்தாலும் மாறி மாறி தொலைபேசியைப் பார்த்த படியே அமர்ந்து இருக்கின்றனர். அங்கு வார்த்தைகளுக்கு இடமில்லாமல் தொலைபேசி மீது உள்ள மோகமே ஊமையாக்கியுள்ளது. பெற்றோர்களுக்கிடையான உறவாயினும் சரி, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு இடையேயான உறவாயினும் சரி சரியான உறவுப் பாலம் தொலைபேசி என்ற உறவு வந்தமையினால் கேள்விக்குறியாகி நிற்கின்றது. உண்மையான அன்பு, அக்கறையெல்லாம் வெகு தூரம் சென்று விட்டது.

வீட்டில் உறவுகள் ஒட்டி இருந்ததை தொலைபேசியானது மென்மேலும் விரிசலாக்கி இருக்கின்றது.இதனால் உறவுகளுக்கு இடையே இருந்த தனிமை மேலும் தனிமை ஆக்கப்பட்டுள்ளது. ஆறுதலுக்கு ஒரு நபர் இருக்கின்றார் என்பது அங்கு நபர் அல்ல மாறாக அது “தொலைபேசியே” எனலாம்.

இவ்வாறான நிலையில் அதன் பாவனையைக் குறைத்துக் கொள்ளும் பொழுது அது எம்மை நல்லதோர் பாதைக்கு வழி நடத்திச் செல்லும்.

# ‘முட்டாள்கள் குறைந்த மூளையுடையவர்கள்’

கடந்த 1994ஆம் ஆண்டு உலக அழகி என்ற பட்டத்தைப் பெற்றவர் ஐஸ்வர்யா ராய். இவர் தமிழ், இந்தி, ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் நடித்து ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளார். இவருக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். பாலிவுட் நடிகர் அமிதாப்பச்சனின் மகனும் நடிகருமான அபிஷேக் பச்சனை காதலித்து கடந்த 2007ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஆராத்யா (13) என்ற மகள் இருக்கிறார்.

இதற்கிடையில் அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் இருவருக்கும் கருத்து வேறுபாடு நிலவி வருவதாகவும், விரைவில் இவர்கள் விவாகரத்து செய்து கொள்ள இருப்பதாகவும் பரவலாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வந்தன. சமீபத்தில், மும்பையில் நடந்த பிரம்மாண்டமான விருந்து நிகழ்ச்சி ஒன்றில் ஐஸ்வர்யா ராய் மற்றும் அபிஷேக் பச்சன் இணைந்து ஒன்றாகக் கலந்து கொண்டனர். அது தொடர்பான புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு விவாகரத்து குறித்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

இந்தநிலையில், நடிகர் அமிதாப்பச்சன், வதந்தி பரப்புபவர்களுக்கு எதிராகக் காட்டமாக வெளியிட்டுள்ள பதிவு வைரலாகி வருகிறது. அதன்படி,



அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

‘முட்டாள்கள்...குறைந்த மூளை கொண்டவர்கள். இந்த உலகில் அத்தகையவர்களுக்கு ஒருபோதும் பஞ்சமில்லை. அறிவு குறைபாடுகளை மறைப்பதற்காக ஒவ்வொரு நாளும் தங்களின் சொந்த பொய்யான கருத்துகளை உருவாக்கிப் பரப்புகிறார்கள்’ இவ்வாறு தெரிவித்துள்ளார்.



## ஜிவி பிரகாஷ் - சைந்தவி ஜோடி மீண்டும் இணைந்தனர்

இசை அமைப்பாளரான ஜி.வி.பிரகாஷும், பாடகியான சைந்தவியும் தமிழ் திரையுலகில் மிகவும் பிரபலமான ஜோடியாக இருந்தனர். பள்ளியில் படிக்கும் போது இருந்தே நண்பர்களாக இருந்த இவர்கள், 2013ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். காதலிலிருந்த போதும், திருமணம் ஆன பின்பும் இருவரும் இணைந்து நிறையப் பாடல்களை உருவாக்கியுள்ளனர்.

அவற்றில் பல ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தும் உள்ளது.

ஜி.வி.பிரகாஷுடன் இணைந்து சைந்தவி பாடிய ‘யாரோ இவன்’ மற்றும் ‘பிறை தேடும் இரவினிலே’ ஆகிய பாடல்கள் இன்றும் ரசிகர்கள் மனதில் இடம் பெற்றுள்ளது.

இந்த விவாகரத்து தொடர்பாகப் பல வதந்திகள் சமூக வலைத்தளங்களில் பரவியது.

இருப்பினும் அதனை இருவரும் மறுத்தனர். விவாகரத்து செய்தாலும் தாங்கள் நண்பர்களாகவே இருப்போம் என்று ஜி.வி.பிரகாஷும் சைந்தவியும் தெரிவித்து இருந்தனர்.

இந்நிலையில், ஜி.வி.பிரகாஷ் இசை நிகழ்ச்சி கடந்த வாரம் மலேசியாவில் நடைபெற்றது. இதில் சைந்தவியும் கலந்து கொண்டு பாடல்கள் பாடினார். மேலும் சில பாடல்களை இருவரும் இணைந்து பாடியுள்ளனர்.

ஜி.வி.பிரகாஷ் பியானோ வாசிக்க, தனுஷ் - செல்வராகவன் கூட்டணியில் உருவான மயக்கம் என்ன படத்தில் வரும் பிறை தேடும் இரவிலே என்ற பாடலை சைந்தவி பாடினார். அவர் இந்த பாடலை பாடியபோது ரசிகர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து ஆரவாரம் செய்து கொண்டாடியுள்ளனர்.

## பிரக்யாவின் அந்தரங்க வீடியோ

நடிகைகள் ராஷ்மிகா மந்தனா, பிரியங்கா சோப்ரா, கத்ரினா கைப், கஜோல் போன்றோரின் டீப் பேக் ஆபாச வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சி கொடுத்தன.

இந்த நிலையில், தற்போது நடிகை பிரக்யாவின் ஆபாச டீப் பேக் வீடியோவும் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர் தமிழில் ஜீவாவுடன் வரலாறு முக்கியம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி என் 4, லக்கம் உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். தற்போது ஜெய்யுடன் நடித்து வருகிறார். மலையாளத்திலும் அதிக படங்களில் நடித்துள்ளார்.

பிரக்யாவின் அந்தரங்க வீடியோ என்ற பெயரில் ஆண் ஒருவருடன் நெருக்கமாக இருக்கும் வீடியோ வலைத்தளத்தில் வெளியானது.



அந்த பெண் பிரக்யா தோற்றத்திலிருந்ததால் பலரும் அதை வைரலாக்கினர். இதனால் வருத்தமான பிரக்யா வீடியோவில் இருப்பது நான் அல்ல என்று மறுத்து வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “வீடியோவை ஒரு கெட்ட கனவுபோல் நம்புகிறேன். தொழில்நுட்பம் என்பது நமக்கு உதவுவதற்காகத்தானே தவிர வாழ்க்கையை நாசமாக்குவதற்கு அல்ல.

ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலம் இதுபோன்ற செயல்களைச் செய்பவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட முடியுமா? இந்த நேரத்தில் எனக்கு ஆதரவாக இருக்கும் அனைவருக்கும் நன்றி. வேறு பெண்கள் இதுபோன்ற கஷ்டத்தைச் சந்திக்கக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். பாதுகாப்பாக இருங்கள்” என்று குறிப்பிட்டு உள்ளார்.

## ‘ஸ்ரீ வள்ளி என் இரண்டாவது அடையாளம்’




சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ஆம் ஆண்டு வெளியான ‘புஷ்பா தி ரைஸ்’ படத்தின் மிகப்பெரிய வரவேற்பைத் தொடர்ந்து தற்போது வெளியாகி உள்ள படம் புஷ்பா 2.

அதன்படி, பிரமாண்ட பொருட்செலவில் உருவான இப்படம் கடந்த 5ஆம் ஆண்டு வெளியாகி இதுவரை ரூ.621 கோடி வசூல் செய்துள்ளது. இப்படத்தில், அல்லு அர்ஜுன் புஷ்பா கதாபாத்திரத்திலும், அவரது மனைவி ஸ்ரீ வள்ளியாக ராஷ்மிகா மந்தனாவும் நடித்திருந்தனர்.

இந்நிலையில், படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பகிர்ந்துள்ள ராஷ்மிகா மந்தனா, ஸ்ரீ வள்ளி தனது இரண்டாவது அடையாளமாகிவிட்டதாகக் கூறியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், ‘ஸ்ரீ வள்ளி என் இரண்டாவது அடையாளமாகிவிட்டார், இது எனக்கு ஆச்சரியமாகவும் பெருமையாகவும் உள்ளது. ஸ்ரீ வள்ளியை எனக்குக் கொடுத்து, இந்த நிலைக்கு என்னைக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் சுகுமார். அதற்காக அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புஷ்பா இல்லாமல் ஸ்ரீ வள்ளி இல்லை. அதற்காக அல்லு அர்ஜுனுக்கு என் இதயத்திலிருந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை ஸ்ரீ வள்ளி வெறும் கதாபாத்திரம் அல்ல. அவரை உண்மையாக உணர்கிறேன்’ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## நான்கு நாட்களில் ரூ.800 கோடி வசூல்





அல்லு அர்ஜுன் நடிப்பில் வெளியான புஷ்பா 2 படம் ரிலீஸான நான்கே நாட்களில் உலக அளவில் ரூ.800 கோடி வசூல் செய்திருக்கிறது. அதைப் பார்த்த தமிழ் சினிமா ரசிகர்களோ, கங்குவாவுக்கு நடக்கும் என்றது புஷ்பாவுக்கு நடக்குதே என்கிறார்கள்.

சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ரஷ்மிகா மந்தனா, ஃபஹத் ஃபாசில் உள்ளிட்டோர் நடித்த புஷ்பா 2 படம் டிசம்பர் 5ம் திகதி தியேட்டர்களில் ரிலீஸானது.

படம் ரிலீஸான அன்றே இந்தியாவில் மட்டும் ரூ.200 கோடி வசூல் செய்தது.

இந்நிலையில் திரைக்கு வந்த நான்கு நாட்களிலேயே உலக அளவில் ரூ.800 கோடி வசூல் செய்திருக்கிறது. புஷ்பா 2 படத்தின் வசூல் வேட்டையைப் பார்த்து சினிமா ரசிகர்கள் மிரண்டு போயிருக்கிறார்கள்.

4 நாட்களில் ரூ. 800 கோடி என்றால் ஒரு மாதத்திற்குள் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு வசூல் வந்துவிடும்.

# கிராமத்து வாழ்க்கை



கிருவதாஸ் டினுஜிக்கா,
இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

‘கிராமம் சிரிப்பதும் கொம்பும் அழுவதும் கோழி’ இப் பழமொழி கிராம வாழ்க்கையின் எளிமை மற்றும் நேர்த்தியான தன்மையைக் குறிக்கின்றது. இயற்கை வளங்கள் நிறைந்து கிடக்கும் அழகிய சிற்றூர். மலைகள், ஆறுகள், குளங்கள், வயல்வெளிகள் சிற்றோடைகள் என இயற்கைக்குப் பஞ்சமே இல்லாத இடம்.

இங்கு செயற்கை என்ற சொல்லுக்கு அரிதான இடமே வழங்கப்படுகின்றது. கள்ளங்கபடமற்ற எளிமையான மனிதர்களையும் ஆடம்பரமற்ற அமைதியான வாழ்க்கையையும் இங்கு காணலாம்.

இன்று நகர்ப்புற மக்கள் மறந்த நமது கலாசாரம் பண்பாடு, சடங்குகள், கலைகள், வழக்காறுகள் இன்றும் உயிர்ப்புடன் இருக்கும் ஒரே இடம்.

இக் கிராம வாழ்க்கையின் வாழ்வியல்பற்றி நோக்கும்போது இம்மக்களின் வாழ்க்கை எளிமையிலும் எளிமையானது. இயற்கையோடு இணைந்த வாழ்க்கைமுறையாகவே காணப்படுகின்றது. இது பெரும்பாலும் விவசாயம், விலங்கு வளர்ப்பு, மற்றும் இயற்கை வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இவ்வாழ்க்கை முறையில்தான் கூட்டுக்குடும்ப வாழ்வின் முக்கியத்துவத்தையும் அறிய முடியும்.

குலதெய்வ வழிபாடு, கோயில், திருவிழா, திருமணம், விசேட நாட்களில் சுற்றத்தார் அனைவரும் ஒன்றுகூடி அவற்றைப் பரஸ்பர ஒத்துழைப்புடன் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுவர்.

இம்மக்களின் உணவு முறை பற்றி நோக்குகையில், கிராமத்தில் வாழும் மக்கள் 70 மற்றும் 80 வயது கடந்தும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவர்களுடைய உணவு முறை இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இயற்கையாகவே தமக்குத் தேவையான உணவுகளைத் தாமே உற்பத்தி செய்து நஞ்சற்ற உணவுகளை உண்ணுகின்றனர்.

கிராமத்துக்குப் புதிதாக ஒருவர் வந்தாலும் கூட அவரை இன்முகத்துடன் வரவேற்று அவருக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுக்கும் மனப்பாங்கு இவர்களிடையே காணப்படுகின்றது.

மாமா, மச்சான்,

> கிராமத்தில் வாழும் மக்கள் 70 மற்றும் 80 வயது கடந்தும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவர்களுடைய உணவு முறை இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இயற்கையாகவே தமக்குத் தேவையான உணவுகளைத் தாமே உற்பத்தி செய்து நஞ்சற்ற உணவுகளை உண்ணுகின்றனர்

சித்தப்பா, பெரியப்பா, தாத்தா, பாட்டி என உறவுகளுக்கும் அந்த உறவுகளின் ஒற்றுமைக்கும், உபசரிப்புக்கும் பஞ்சமே கிடையாது.


இவ்வாறு இந்த வாழ்க்கைமுறையில் எவ்வளவோ நன்மைகள் காணப்பட்டாலும் இதிலுமே சவால்கள் உண்டு.

சுகாதார வசதிகள் இங்கு மேம்படுத்தப்படாமை. இங்கு மருத்துவமனை காண்பதென்பது மிகவும் அரிது.அவ்வாறு மருத்துவமனைகள் காணப்பட்டாலும் அங்கு த{விரமான நோய்களுக்கான மருந்துகளைபெற்றுக்கொள்வதில் சிக்கல்நிலை உண்டு.

இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் இவர்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு சவால் நீர்ப்பற்றாக்குறை மற்றும் பருவமழை கிடைக்காமைஇவறட்சி போன்றவற்றை குறிப்பிடலாம்.

கிராமப்புறங்களில் நகர்ப்புறத்தைவிடவும் கல்வி வாய்ப்புகள் குறைவு.இங்கு கல்வி அமைப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில் ஊருக்கு ஒரு பள்ளிக்கூடம் தான் இருக்கும் உயர்தரத்தில் கல்வி கற்க நகர்ப்புறங்களை நோக்கி மாணவர்கள் செல்ல வேண்டிய சூழல் காணப்படுகின்றது. இதைவிடவும் பொருளாதார வசதிகள் குறைவு, மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் குறைவு.

இவ்வாறு எவ்வளவுதான் சவால்கள் காணப்பட்டாலும் இந்த வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய எளிமை மற்றும் அமைதியான வாழ்க்கைமுறையை உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் அனுபவித்துவிட முடியாது. நகரத்தில் வாழும் ஒவ்வொரு மக்களின் கனவாகவே இது காணப்படுகின்றது.



சிரியா

### தப்பியோடிய ஜனாதிபதி ஆசாத்

# ரஷ்யாவில் தஞ்சம்

சிரியாவில் இருந்து தப்பியோடிய சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் மற்றும் அவருடைய குடுமபத்தினர் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் என கிரெம்ளின் மாளிகை வட்டாரம் தெரிவிக்கின்றது.

சிரியா நாட்டில் ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரசு இரு தசாப்தங்களாக நடந்து வந்த நிலையில், அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் போராட்டம் கடந்த வாரம் தீவிரமடைந்தது. கிளர்ச்சியாளர்கள், சிரியாவின் அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளை கைப்பற்றியதுடன் தொடர்ந்து, ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறினர். இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து தப்பியோடினர்.

இந்த சூழலில் டமாஸ்கஸ் நகரையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இதனால், பாதுகாப்பு தேடி, அந்நாட்டு ஜனாதிபதி ஆசாத், டமாஸ்கஸில் இருந்து வெளியேறிவிட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ஆசாத் என்ன ஆனார் என்ற விவரம் சரிவர வெளியிடப்படாமல் இருந்தது.

இந்த நிலையில், அந்நாட்டில் இருந்து தப்பியோடிய ஆசாத் மற்றும் அவருடைய குடுமபத்தினர் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் என, கிரெம்ளின் மாளிகை வட்டாரம் தெரிவிக்கின்றது.

இது குறித்து ரஷ்ய செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், “ஆசாத் மற்றும் அவருடைய குடுமபத்தினர் மாஸ்கோ நகருக்கு வந்துள்ளனர். ரஷ்யா மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. சிரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும் என எப்போதும் ரஷ்யா கூறி வருகிறது.

“ஐ.நா. மத்தியஸ்தம் செய்யும் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம் என ரஷ்ய அரசின் நெருங்கிய வட்டாரம் தெரிவிக்கிறது” என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆந்திரா

### பொங்கலை முன்னிட்டு பந்தய சேவல்

# ரூ.3 இலட்சம் வரை விற்பனை

ஆந்திர மாநிலத்தில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பந்தய சேவல் விற்பனை, இணைய வழி மூலம் தொடங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சேவலும், 30 ஆயிரம் ரூபாய் முதல் 3 இலட்சம் (இந்திய பெறுமதி) வரை விற்பனை செய்யப்படவுள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்களும் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடக மாநிலத்தை சேர்ந்தவர்களும் இணையதளத்தின் மூலம் சேவல்களை வாங்க தொடங்கி விட்டனர்.

பொங்கல் பண்டிகைக்கு சேவல் பந்தயங்கள் இந்த ஆண்டு கோதாவரி மாவட்டங்களில் மட்டும் 500 கோடி ரூபாய் (இந்திய பெறுமதி) வரை நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



புதுடெல்லி

### பாராளுமன்ற வளாகத்தில்

# இந்தியா கூட்டணி எம்.பிக்கள் போராட்டம்

பாராளுமன்ற வளாகத்தில், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, திமுக எம்.பி. கனிமொழி உட்பட இந்தியா கூட்டணி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதானி குழுமம் மீதான குற்றச்சாட்டுகளைப் பாராளுமன்றத்தில், நேற்று (9) விவாதிக்கக் கோரியே, இந்தியா கூட்டணி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தின் போது, அவையை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரம் தொடர்பான தீர்மான பத்திரங்கள் மீது விவாதம் நடத்தக்கோரி எம்.பிக்கள் முழக்கங்களை எழுப்பினர். இந்த போராட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கட்சி எம்.பிக்கள் கலந்துகொள்ளவில்லை.




இதற்கிடையே, காலை 11 மணிக்குத் தொடங்கிய மக்களவையில் அதானி விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டதால் நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்துள்ளார்.

புதுடெல்லி


# தனியார் பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

புதுடெல்லியில் இரண்டு தனியார் பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மிரட்டலை அடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இது தொடர்பாக புதுடெல்லி தீயணைப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், “டி.பி.எஸ்., ஆர்.கே. புரத்தில் இருந்து, நேற்று (9) காலை 7.06 மணிக்கும், ஜி.டி. கோயங்கா, பஸ்சிம் விஹார் பகுதியில் இருந்து, திங்கட்கிழமை (9) காலை 6.15 மணிக்கும் வெடிகுண்டு மிரட்டல் அழைப்புகள் வந்துள்ளன.

தீயணைப்புத் துறையினர், மோப்ப நாய்கள், வெடிகுண்டு கண்டறியும் குழுவினர், உள்ளூர் பொலிஸார் ஆகியோர் பாடசாலைகளுக்கு வந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் கூறியுள்ளார்.




### இலங்கைக்கெதிரான தொடரை

# 2-0 என கைப்பற்றிய தென்னாபிரிக்கா

இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரை 2-0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த தென்னாபிரிக்கா, கஹபெஹாவில் வியாழக்கிழமை (05) ஆரம்பித்து திங்கட்கிழமை (09) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியை வென்றமையையடுத்தே 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, கைல் வெரைனின் ஆட்டமிழக்காத 105, றயான் றிக்கெல்டனின் 101, அணித்தலைவர் தெம்பா பவுமாவின் 78 ஓட்டங்களை சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 358 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், லஹிரு குமார 4, அசித பெர்ணாண்டோ 3, விஷ்வ பெர்ணாண்டோ 2, பிரபாத் ஜெயசூரிய ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 89, கமிந்து மென்டிஸின் 48, அஞ்சலோ மத்தியூஸின் 44, தினேஷ் சந்திமாலின் 44 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டேன் பற்றர்சன் 5, கேஷவ் மஹராஜ் 2, மார்கோ ஜன்சன் 2, ககிஸோ றபாடா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, பவுமாவின் 66, ஏய்டன் மார்க்ரமின் 55, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸின் 47, டேவிட் பெடிங்ஹாமின் 35 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளை இழந்து 317 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், பிரபாத் ஜெயசூரியா 5, விஷ்வ பெர்ணாண்டோ 2, அசித பெர்ணாண்டோ 1, குமார 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அந்தவகையில், 348 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, அணித்தலைவர் தனஞ்சய டி சில்வாவின் 50, குசல் மென்டிஸின் 46, கமிந்து மென்டிஸின் 35, மத்தியூஸின் 32, சந்திமாலின் 29 ஓட்டங்களோடு வெற்றியிலக்கை நோக்கிப் பயணித்தபோதும் கேஷவ் மஹராஜ் (5), பற்றர்சன் (2), றபாடா (2), ஜன்சனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 238 ஓட்டங்களையே பெற்று 109 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பற்றர்சன், தொடரின் நாயகனாக பவுமா ஆகியோர் தெரிவாகினர்.




### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# செவிய்யாவை வீழ்த்திய அத்லெட்டிகோ மட்ரிட்

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்ற செவிய்யாவுடனான போட்டியில், 4-3 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

மட்ரிட் சார்பாக அந்தோனி கிறீஸ்மன் இரண்டு கோல்களையும், றொட்றிகோ டீ போல், சாமுவேல் லினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். செவிய்யா சார்பாக டொடி லுகெபகியோ, இஸக் றொமெறோ, ஜுவான்லு சஞ்சேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# டொட்டென்ஹாமை வென்ற செல்சி

## சமநிலையில் ஆர்சனல்பு ல்ஹாம் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 4-3 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது.

செல்சி சார்பாக கோல் பல்மர் இரண்டு கோல்களையும், ஜடோன் சஞ்சோ, என்ஸோ பெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாக, டொமினிக் சொலங்கி, டெஜன் குலுவென்ஸ்கி, சண் ஹெயுங்க்-மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், புல்ஹாமின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது. ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை வில்லியம் சலிபா பெற்றதோடு, புல்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை றாஃவுல் ஜிமென்ஸ் பெற்றார். இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.



### முதலாவது போட்டியில்

# பங்களாதேஷை வென்றது மேற்கிந்தியத் தீவுகள்

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், சென். கிட்ஸில் ஞாயிற்றுக்கிழமை(08) நடைபெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 294/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் 74 (101), தன்ஸிட் ஹஸன் 60 (60), மகமதுல்லா ஆ.இ 50 (44), ஜாகிர் அலி 48 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொமாரியோ ஷெப்பர்ட் 3/51, அல்ஸாரி ஜோசப் 2/67, ஜேடன் சியல்ஸ் 1/63)

மேற்கிந்தியத் தீவுகள்: 295/5 (47.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 113 (80), ஷே ஹோப் 86 (88), ஜஸ்டின் கிறேவ்ஸ் ஆ.இ 41 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிஷாட் ஹொஸைன் 1/49, நஹிட் ராணா 1/50, தன்ஸிம் ஹஸன் சகிப் 1/55)

போட்டியின் நாயகன்: ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 10 டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.